Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 | National Tamil Daily | தேசிய தினசரி | தபாற் பெட்டி எண் 49

மலர் 4 | யாழ்ப்பாணம், பிலவ பங்குனி 4 ஆம் நாள் | ஷவ்வால் 10 | (17-3-62) | சனிக்கிழமை | இதழ் [illegible]

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்–2 மதுரை

# கரையூர் மீனவர்கள்

## இன்னும் கரைதிரும்பவில்லை!

## ஹெலிகோப்டர் விமானங்கள் தேடுகின்றன

யாழ்ப்பாணம், சனி

படகில் மீன் பிடிக்கச் சென்ற கரையூரைச் சேர்ந்த நால்வரும் அவர்கள் சென்ற படகும் ஆறு தினங்களாகியும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை மீன் பிடிக்கச் சென்ற இவர்கள் பற்றி இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை. இவர்களைக் கண்டுபிடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கடற்றொழில் அமைச்சருக்கும் முப்படைத் தலைவர்களுக்கும் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஏ. டி. துரையப்பா நேற்று அவசரத் தந்திச் செய்திகளை அனுப்பிவைத்துள்ளார்.

இலங்கை விமானப்படையைச் சேர்ந்த 'ஹெலிகோப்டர்' விமானங்கள் இரண்டு நேற்று இரவு பலமுறை கரையோரப் பகுதியைச் சூழ்ந்து ரோந்து சுற்றியும் இவர்கள்பற்றி எதுவித தகவலும் கிடைக்கவில்லையென்றும் மேலும் விபரங்கள்பற்றி உடனுக்குடன் அறிவிக்குமாறும் விமானப்படை கமாண்டர் பொலிசாருக்கு கடந்த இரவு தெரிவித்திருக்கிறார். இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை மேற்கொண்டு எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

கரையூரைச் சேர்ந்த கறுப்பையா, பெரேரா, செபஸ்தியான் பெர்னாண்டோ, அந்தோனிப்பிள்ளை ஆகிய நால்வரும் இம்மாதம் 11-ம் திகதி காலை படகில் மீன் பிடிக்கச் சென்றனர். மீன் பிடிக்கச் சென்ற இந்நால்வரும் மீளாததுபற்றி யாழ்ப்பாணம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டிருந்தும் இவர்கள்பற்றி இதுவரை எதுவித செய்தியும் கிடைக்கவில்லை.

இவர்களைக் கண்டுபிடிப்பதில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும் அவசரத் தந்திகளை கடற்றொழில் அமைச்சருக்கும், விமானப்படை, பொலீஸ்படை, கடற்படை அதிகாரிகளுக்கும் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் கேர்ணல் உடுகமவுக்கும் யாழ்ப்பாணம் எம். பி. திரு. துரையப்பா அனுப்பிவைத்துள்ளார்.

## கானா ஹைகமிஷனர் யாழ்ப்பாணம் விஜயம்

### மூன்று நாள் தங்கியிருப்பார்

யாழ்ப்பாணம், சனி

இலங்கையிலுள்ள கானா ஹைக்கமிஷனர் வண. எஸ். ஜி. நிமாக்கோ நேற்று விமான மூலம் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்தார். நேற்றுக் காலை பலாலி விமானநிலையத்தில் அவர் வந்திறங்கிய போது காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. ஏ. இராசரத்தினம் மலர்மாலை சூட்டி அவரை வரவேற்றார். விமான நிலையத்தில் அநேக பிரமுகர்களும் பொதுமக்களும் அவரை வரவேற்கச் சென்றிருந்தனர். கானா ஹைக்கமிஷனருடன் அவரது அந்தரங்கக் காரியதரிசி திரு. தெய்வேந்திர இராசையாவும் வந்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் மூன்று தினங்கள் தங்கியிருந்துவிட்டு இம்மாதம் 19-ம் திகதி கொழும்புக்குப் பிரயாணமாகிறார்.

யாழ்ப்பாண மாநகரசபைக்கு நேற்றுக் காலை விஜயஞ் செய்த வண. நிக்கோமாவை மேயர் திரு. எம். ஜேக்கப்பும் கமிஷனர் திரு. டி. டி. ஜெயசிங்காவும் வரவேற்றனர். இதன் பின் இராசமாளிகையில் நீதியரசர் டாக்டர் தம்பையாவைச் சென்று பார்வையிட்டார். அங்கு திருமதி தம்பையாவும், நீதியரசரும் அவரை வரவேற்றனர்.

யாழ்ப்பாணம்சென் ஜோன்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றிற்கும் சென்று அங்கு மாணவர்களிடையே விரிவுரை நிகழ்த்தினார். வடமாகாண அரசாங்க அதிபர் லெப்டினன்ட் கேர்ணல் உடுகமவைச் சந்தித்து உரையாடினார்.

இங்கு தங்கியிருக்கும் நாட்களில் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, ஊர்காவற்றுறை, நயினாதீவு, கடற்படைத் தளம் ஆகியவற்றிற்குச் சென்று பார்ப்பதோடு சென். பட்ரிக்ஸ் கல்லூரி பழைய மாணவர்சங்க விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுவார்.

## இளைஞனின் அதிர்ஷ்டம்

கொழும்பு, வியாழன்

கொழும்பு. கால்பேஸ் ஹோட்டலில் சேவகராகக் கடமையாற்றிய உடஹமுல்லை என்ற இடத்தைச் சேர்ந்த எஸ். கருணதாசா (19 வயது) என்ற இளைஞன் அமெரிக்க குடும்பமொன்றின் வீட்டில் வேலை செய்வதற்காக இன்றிரவு நியூயோர்க் நகருக்கு விமான மார்க்கமாக பயணமானார். அங்கு இவரது மாதச் சம்பளம் 100 டாலர்கள் (ரூ. 475) ஆகும். கால்பேஸ் ஹோட்டலில் இவர் வேலை பார்த்தசமயம் ரூ 42-50 மட்டுமே அவரது சம்பளம் என்பது குறிப்பிடத்தக்கது.

அதிர்ஷ்டசாலியான பெர்னாண்டோவுக்கு அங்கு தங்குவதற்கு ஒரு அறையும் சாப்பாடும் கொடுக்கப்படும். அத்துடன் இவர் வசதிக்கேற்ப 'டெலிவிஷனும்' பொருத்தப்படும்.

கருணதாசா கால்பேஸ் ஹோட்டலில் வேலைசெய்து, தனது குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். குடும்பத்தில் மூத்தவரான இவருக்கு நான்கு சகோதரர்கள் உண்டு. கடந்த டிசம்பர் மாதம் ஹென்றி வி. மில்லர் (அமெரிக்க) தம்பதிகளை ஹோட்டலில் கருணதாசா சந்தித்தார். கருணதாசவை விரும்பிய அவர்கள் தங்களுடன் நியூயோர்க் வரும்படி கேட்டனர். அதற்கு அவர் சம்மதம் தெரிவித்திருந்தார்.

நுகேகொடை அர்ச். ஜோன் கல்லூரியில் படித்து ஜே. எஸ். ஸி. சித்திபெற்ற கருதணதாசா நியூயோர்க்கில் தனது படிப்பை விருத்தி செய்ய முயற்சிப்பார் எனத் தெரிகிறது.

## சீனப்படைகள் வெளியேறினால் ஒப்பந்தம்பற்றி பேசலாம்

### பீகிங்கிற்கு இந்தியா குறிப்பு

புதுடில்லி, மார்ச் 16

சீனாவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமானால், பாரதப் பிரதேசத்திலிருந்து சீனப் படைகள் வெளியேறி சமாதான சூழ்நிலையைத் தோற்றுவிக்க வேண்டும் என இந்தியா, சீனாவுக்குக் குறிப்பு அனுப்பியுள்ளது.

"இந்தச் செயலின் மூலம் தான் இருநாடுகளுக்குமிடையே நிலவிய பழங்கால நட்பு மீண்டும் தழைத்தோங்கும்" என்றும் இந்தக்குறிப்புக் கூறியுள்ளது. சீனா முன்பு எழுதிய ஒரு கடிதம் இந்தியாவை மிரட்டுவது போன்ற வகையில் இருந்ததைக் கண்டித்து, சீனப்படைகள் மேற்கொண்டு மாக்மோகன் எல்லைக்கோட்டைத் தாண்டினால் அவற்றைத் தடுத்து நிறுத்த ஆவன செய்யப்படும் என்றும் குறிப்பு கூறியதும் பஞ்சசீலக் கொள்கையைச் சீனா மீறிவிட்டதென்றும், 12,000 சதுரமைல் இந்தியப் பிரதேசத்தை அது ஆக்கிரமித்திருக்கிறதென்றும் இந்தியா கூறியுள்ளது.

சீனப் பிரதேசத்தில் இந்திய விமானங்கள் 24 தடவை பறந்ததாகச் சீனா குற்றஞ்சாட்டியுள்ளதையும் இந்தியா மறுத்துள்ளது.

பெப்ரவரி 26-ம் தேதி சீனா அனுப்பிய கடிதத்திற்குப் பதில் அளிக்கும் வகையிலேயே இந்தக் குறிப்பு அனுப்பப்பட்டது.

## 577 கோடி டாலர் அந்நிய உதவி

### காங்கிரஸுக்குகென்னடி வேண்டுகோள்

வாஷிங்டன், மார்ச் 16

1963ம் நிதி வருடத்துக்கான 577,84,00,000 டாலர் அந்நிய ராணுவ, பொருளாதார உதவித் திட்டத்தை காங்கிரசுக்கு ஜனாதிபதி கென்னடி அனுப்பினார்.

புது நிதிகளுக்கு 48,780 லட்சம் டாலரை ஒதுக்குமாறு காங்கிரஸை அவர் கேட்டுக்கொண்டார். மற்ற நாடுகளுக்கு உதவும் பொறுப்பை நீடித்து வகிக்குமாறு அமெரிக்க மக்களை அவர் கேட்டுக்கொண்டார்.

## வர்த்தகர் கொலை; மூவர் கைது

கொழும்பு, வெள்ளி

கடந்த பெப்ரவரி மாதம் 27-ம் திகதி இரவு புறக்கோட்டை இரண்டாம் குறுக்குத் தெருவில் வெடிகுண்டுக்குப் பலியான திரு. அப்துல் றஹீம் அஜ் அப்துல்லா (வர்த்தகர்)வின் கொலை சம்பந்தமாக புறக்கோட்டைப் பொலிஸார் இன்று மூவரைக் கைது செய்துள்ளனர்.

## பார்லிமெண்ட் ஒத்திவைப்பு

கொழும்பு, வெள்ளி

பார்லிமெண்ட் மார்ச் 29-ம் தேதி வியாழக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டது.

புதுடில்லி, மார்ச் 16

"ஆகாசவாணி" 56 புதிய டிரான்ஸ்மீட்டர்களை அமைக்கவிருக்கிறது. இருவருடங்களில் இவைகள் பூர்த்தியாகும்.

## ஈழநாடு

18-3-62 வாரப்பதிப்பில்

★ பயணச் சாப்பாடு: சுந்தரலிங்கம் கட்டுரை

★ நெய்வேலி-நவீன தொழில் நகரம் கே. பி. ஹரன்

★ கலியாணத் தரகர் 'கந்தையாண்ணை' சிறுகதை: 'செங்கை ஆழியான்'

★ புதிய மலேசியா வ. மகாதேவன்

★ நடமாடும் கலைமாடம்

உலக மேடை : மகளிர் மன்றம்

கலை அரங்கம் : சிறுவர் பூங்கா

இன்னும் பல சுவையான அம்சங்கள்

# அகில இலங்கை கல்லூரிகள் கூடைப் பந்தாட்டப் போட்டி

## யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை கல்லூரிகளின் கூடைப் பந்தாட்டப் போட்டியின் வெற்றிக்கிண்ணத்துக்கான 'சாம்பியன்' ஆட்டங்கள் இம்மாதம் 29, 30, 31-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

இப்போட்டியில் மொத்தம் எட்டுக் கல்லூரிகள் பங்கு பற்றுமெனத் தெரிகிறது.

## நடேஸ்வரன்ஸ் விளையாட்டுக்கழகம்

தெல்லிப்பழை, வெள்ளி

வருடந்தோறும் நடத்திவருகிற கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை இம்முறை சித்திரை மாத நடுப்பகுதியில் நடத்துவதென காங்கேசன்துறை நடேஸ்வரன்ஸ் விளையாட்டுக்கழகம் தீர்மானித்துள்ளது. ஓவர் கேம் முறையிலும், செற்றப் கேம் முறையிலும் கைப்பந்தாட்டப் போட்டியை நடத்துவதெனவும் முடிவாகியுள்ளது. எப்ரல் மாதம் 5-ம்திகதிக்குமுன்னர் விளையாடடுக்கழகங்கள் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### பாடப்புத்தகங்கள்

திரு. வே. சிவக்கொழுந்து மூன்றும், ஐந்தாம் மனக்கணிதம், மூன்றும் சூழல், விஜயன் விக்டோரியா இலங்கைச் சரித்திர விளக்கம் புதியபதிப்புகள் வெளிவந்துவிட்டன. ஆசிரியர்கட்கும் கொமிஷனுண்டு. தேவைக்கு எழுதுக. கலாபவனம், பருத்தித்துறை.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர்
கைலாசபிள்ளையார் கோவிலடி
யாழ்ப்பாணம்

### தேவை

இல.70, கஸ்தூரியார்வீதியில் புதிதாகத் திறக்கவிருக்கும் மோட்டார் கராச்சிற்கு பெயின்ரிங் வேலை செய்வதற்கும் டிங்கர் வேலை செய்வதற்கும் அனுபவம் உள்ளவர்கள் தேவை. விபரங்கட்கு லிங்கம்ஸ் எலெக்றிக்கல், 723 கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

ஒரு மாதம் பாவித்த 9 18 H. P. "ஜோன்ஸன்ஸ்" என்ஜின்கள் (கட்டுமரத்திற்கு) விற்பனைக்குண்டு. சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். 20, நல்லூர குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

### நன்றி அறிவித்தல்

திரு. அ. அருளம்பலம் அவர்களின் ஈமக்கிரியையின் போது சமுகந்தந்தும், மலர் வளையங்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமது துக்கத்திற் பங்குபற்றிய சகல நண்பர்கள் உறவினர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைச் செலுத்துகின்றோம்.

திருமதி அருளம்பலமும்,
பிள்ளைகளும்.

நீராவியடி.
யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள சிங்கர் தையல் மெஷின் கால் ரெயிலர் மெஷின் விற்பனைக்கு உண்டு. மொடேர்ன்ரெக்ஸ்ரைல்ஸ், மெயின் வீதி, பருத்தித்துறை.

## சுபகிருதுவருஷ பஞ்சாங்கம்

### சுபகிருதுவருஷ வாக்கிய பஞ்சாங்கம்: 1962-63

யாழ்ப்பாணம், கொக்குவில் இரகுநாதையர் 'சுபகிருது வருஷ வாக்கிய பஞ்சாங்கம் சகல அம்சங்களுடனும் வழக்கம்போல் வெளியாகியுள்ளது.

சுப முகூர்த்தங்கள், தேவாலய மகோற்சவ தினங்கள், மாதகோசர பலன் உட்படபஞ்சாங்க விளக்கமும் தரப்பட்டுள்ளன. தனிப் பிரதிவிலை ரூ. 1-50.

### சுபகிருது வருஷ திருக் கணித பஞ்சாங்கம் 1962-63

யாழ்ப்பாணம் மட்டுவில் சுப்பிரமணியஐயர் சுபகிருதுவருஷ திருக்கணித பஞ்சாங்கம் பஞ்சாங்க பரிபாஷை விளக்கத்துடனும் ஏனைய அம்சங்களுடனும் வெளியாகியுள்ளது. இந்திய அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட திருக்கணித முறைப்படி இப் பஞ்சாங்கம் கணிக்கப்பட்டுள்ளது. தனிப் பிரதி விலை ரூ. 1-25.

## சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் அக் கல்லூரியின் அதிபர் திரு. ஏ. டபிள்யூ. இராசசேகரன் தலைமையில் நடைபெற்றது.

காலையில் கிரிக்கட் பந்தாட்டமும் மாலையில் உதைபந்தாட்ட நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

புதுவருட உத்தியோகத்தர் தெரிவின்போது தலைவராக வழக்கறிஞர் திரு. எஸ். கனகரத்தினம் ஜே. பி. யும், உபதலைவர்களாக டாக்டர் ஏ. கே. பிளாக், திரு. டி. டபிள்யூ. இரத்தினம், வண.பிதா. ஜே. பி. என். ஹண்டி, திரு. ஏ. டி. துரையப்பா எம். பி. ஆகியோரும், காரியதரிசியாக விஜியம் பேதுரும், உதவிக் காரியதரிசியாக திரு. டி. பி. குணசீலனும், தனதிகாரியாக திரு. கே. இராசையாவும் தெரிவு செய்யப்பட்டனர். 20 பேர் கொண்ட நிருவாகசபை யொன்றும் அமைக்கப்பட்டது. திரு. ஏ. டி. இராசசேகரம் கணக்குப் பரிசோதகராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## எல்லாம் நன்மைக்கே

கொழும்பு, வெள்ளி

கொரளை எம்.பி. திரு. ரத்னசிறி விக்கிரமநாயக்கா சுகவீனம் காரணமாக எம். பி. பதவியிலிருந்து ராஜினமாச் செய்வதாக அறிவித்து பின்னர் ராஜினமாக் கடிதத்தை வாபஸ் செய்திருந்தாரல்லவா. இவர் ராஜினமாக் கடிதம் அனுப்பியதற்கிணங்க நேற்று இவர்பார்லிமெண்ட் சபையில்சமுகமளித்திருக்கமுடியாது. ஆனல் அவர் அதிர்ஷ்டவசமாகச் செய்த தவறினல் நேற்று சபையில் இருக்ககூடிய வாய்ப்பைப் பெற்ருர்.

அவர் தமது ராஜினமாக் கடிதத்தை சபாநாயகரிடம் அனுப்பியதாலேயே அவருக்கு நேற்று சபையில் பங்குபற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. ராஜினமாக் கடிதம் வழக்கமாக சபை லிகிதருக்கே அனுப்பப் படவேண்டும்.

எம். பி. சபை லிகிதரிடம் தமது ராஜினமாக் கடிதத்தை அனுப்பியிருந்தால் அவரது ராஜினமா ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கும்.

## உங்கள் தினப்பலன்

சோதிடஆசான் சே. தல்லியூர்

பிலவ ஆண்டு பங்குனி மாதம் 4-ந் திகதி சனிக்கிழமை (17-3-62) முழுமையும் துவாதசி. காலை 9-45 வரை பூசம். பின் ஆயிலியம். சித்தயோகம். வழமையான கருமங்களைச் செய்க. புதியன வேண்டாம். தெய்வ வழிபாட்டால் காலம் கழிக்குக.

### இன்று பிறந்தவர்களுக்கு

இவர்களுக்கு மத்திமமான பலன் காணப்படுகிறது. நிதானமாக நடந்தால் கஷ்ட பலன்களைச் சமாளிக்க முடியும். பெண்வழி கஷ்டங்கள், பொருள் நட்டம், வித்தை மறதி முதலியன இடைப்பகுதியில் காணப்படுகின்றன. பின்னர் தாயாதிகள் உதவி, பொருள் வரவு, வித்தை மேன்மை, உத்தியோகச்சிறப்பு, பெண்களுக்கு சுபகருமச் சிறப்பு, ஆகியன காணப்படுகின்றன. தெய்வவழிபாடு நலந்தரும்.

### நட்சத்திரப் பலன்

அச்சுவினி: தொழிற்கேடு, நலக்குறைவு.
பரணி: வித்தையுயர்ச்சி, மகிழ்ச்சி.
கார்த்திகை: ஏமாற்றம், ஊழியர்நஷ்டம்.
ரோகிணி: உழைப்புநன்மை, தேகநலம்.
மிருகசீரிடம்: தேக நலக் குறைவு, வீண்யோசனை.
திருவாதிரை: பணவரவு, தொழில்நலம்.
புனர்பூசம்: அற்பர்நேசம், செலவு.
பூசம்: பணவரவு, சுபசெய்தி.
ஆயிலியம்: தொழில்நலம், சோம்பல்.
மகம்: தேகநலக்குறைவு, பணவிவகாரம்.
பூரம்: வித்தைப்பயிற்சி, நலம்.
உத்தரம்: ஏமாற்றம், ஊழியர்கஷ்டம்.
அத்தம்: தேகநலம்: கடும் உழைப்பு.
சித்திரை: தேகநலக்குறைவு, பிரயாணக் கஷ்டம.
சுவாதி: பணவரவு, மகிழ்ச்சி
விசாகம்: செலவு அதிகம், கடன்படல்.
அனுஷம்: சுபசெய்தி, பணவரவு.
கேட்டை: தொழில்மந்தம், சோம்பல்.
மூலம்: உடல் உபாதை, பணச்செலவு.
பூராடம்: வித்தைமேன்மை, மகிழ்ச்சி.
உத்தராடம்: ஊழியர் தொல்லை, கஷ்டம்.
திருவோணம்: உழைப்பு தேகாரோக்கியம்.
அவிட்டம்: வீண்யோசனை, அலைச்சல்.
சதயம்: பணவரவு. ஊக்கம்.
பூரட்டாதி: அற்பர் நேசம், செலவு.
உத்தரட்டாதி: வித்தைச் சிறப்பு, தனலாபம்
ரேவதி: அதிகாரிகள் சந்திப்பு, தொழில் அசதி

# தேர்தல் ஆட்சேப மனுக்கள் விசாரணை

## செனட்டில் நீதி மந்திரி வெளியிட்ட தகவல்

கொழும்பு, வெள்ளி

செனட் சபையில் கிரிமினல் சட்ட (விசேஷ விதிகள்) மசோதாமீது நடைபெற்ற விவாதத்தில் ஒரு கேள்விக்கு நீதிமந்திரி செனட்டர் சாம். பி. ஸி. பெர்னன்டோ பதிலளிக்கையில், தேர்தல் ஆட்சேபனை மனுக்களை விசாரணை செய்வதற்கு நீதிபதிகளை நியமிக்குமாறு நீதிபரிபாலன சேவைக் கமிஷன் கேட்டுக் கொள்ளப் பட்டிருப்பதாகக் கூறினர்.

சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் சம்பந்தமாக செனட்டர் ஸ்ரீவர்த்தன பேசுகையில் குறிப்பிட்டு இலங்கையின் சரித்திரத்திலேயே நான்கு அசைஸ் கமிஷனர்கள் வருடம் முழுவதும் பணியாற்றியது இன்றுபோல் என்றுமில்லையென்ருர். தேர்தல் ஆட்சேப மனுக்கள் விசாரணைக்கு வரவிருக்கும் இச்சமயத்தில் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளுக்குத் தட்டுப்பாடுள்ளது என்று செனட்டர் ஸ்ரீவர்த்தன கூறினர்.

செனட்டர் நடேசன்:- தேர்தல் ஆட்சேப மனுக்கள் விசாரணைக்கு வருகின்றனவா?

நீதிமந்திரி:- ஆம். தேர்தல் ஆட்சேப மனுக்களை விசாரணை செய்வதற்காக நீதிபதிகளை நியமிக்குமாறு நீதிபரிபாலன சேவைக் கமிஷன் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இக்கட்டத்தில் பிரதமர் ஏதோ கூறியதும் சபையில் சிரிப்பொலி கிளம்பியது.

நீதிமந்திரி, செனட்டர் நடேசனைப் பார்த்து, "தேர்தல் ஆட்சேப வழக்குகளில் நீங்கள் எவருடைய சார்பிலாவது ஆஜராவதற்கிருக்கிறீர்களா என்று பிரதமர் அறிந்து கொள்ள விரும்புகிறுர்" என்று கூறினர்.

செனட்டர் நடேசன்:- உண்மையைச் சொன்னல், உங்கள் மந்திரிகள் சிலரின் சார்பில் என்னை ஆஜராகுமாறு ஏற்கனவே கேட்கப்பட்டுள்ளேன்.

சபையில் பலத்த சிரிப்பு.

# மேலதிகநேர வேலையை கட்டுப்படுத்த பிரதமர் திட்டம்

## 50 சதவீதம் பணம் மிச்சப்படுத்தலாம் என்கிறுர்

கொழும்பு, வெள்ளி

அரசாங்க இலாகாக்களில் செய்யப்படும் மேலதிகநேர வேலைகளுக்கு அதிக பணம் செலவிடப்படுவதாகவும் இவ்விதம் பணம் செலவு செய்யப்படாதிருக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்றும் பிரதமர் நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுக்கு அறிவித்துள்ளார்.

தமது காரியாலயத்தில் சில மாற்றங்கள் செய்தால் மேலதிகநேரவேலை செய்யவேண்டிய அவசியமில்லாது போயிற்று என்று பிரதமமந்திரி நிதிமந்திரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**50 சதவீதம் மிச்சம்**

எனது காரியாலயத்தில் கடமையாற்றும் கார் சாரதிகளுக்கு வேலைகள் வழங்கப்பட்ட விதத்தில் அவர்கள் மேலதிகநேர வேலைசெய்ய வேண்டிய தேவை இல்லாதுபோயிற்று. வேலைநேரங்களில் சில புதிய மாற்றங்களை ஆராய்ந்து செய்வதால் இவ்வித மேலதிகநேர வேலைக்குக் கொடுக்கும் பணத்தை மிச்சப்படுத்தலாம்.

பிரதமரின் இந்த அறிவித்தலைத் தொடர்ந்து திறைசேரிக் காரியதரிசி திரு. சேர்லி அமரசிங்கி சகல நிரந்தரக் காரியதரிசிகளையும் இலாகாக்களின் அதிபர்களையும் மேலதிகநேர வேலைகள் செய்யவேண்டிய அவசியமேற்படாதவாறு ஒழுங்குகளைச் செய்யுமாறு அறிவித்துள்ளார்.

**நாவற்குளி கிராமசபை**

# நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றியீட்டியது

## புதிய தலைவராக திரு. சிவசுப்பிரமணியம் தெரிவு

யாழ்ப்பாணம், சனி

நாவற்குளி கிராமசபைத் தலைவரான திரு. இ. வேலாயுதர் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மொத்தமுள்ள 14 அங்கத்தவர்களில் 11 பேரின் ஆதரவைப் பெற்று நிறைவேறியது. இதைத் தொடர்ந்து நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தவரான 10-ம் வட்டார அங்கத்தவர் திரு. வி. சிவசுப்பரமணியம் நாவற்குளி கிராமசபையின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிப்பதற்கான இச்சபையின் விசேஷ கூட்டம் நேற்று உள்ளூராட்சி உதவி அதிபர், திரு. என். சிவராசா தலைமையில் நடைபெற்றது.

இக்கிராம சபையின் தலைவரான திரு. வேலாயுதர் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து மூவர் மாத்திரம் வாக்களித்தனர்.

**சங்கானைப் பட்டினசபை**

# தலைவர்மீது நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வி

யாழ்ப்பாணம், சனி

சங்கானை பட்டின சபைத் தலைவர் திரு. என். முத்தையா மீது கொண்டுவரப்பட்டநம்பிக்கையில்லாப்பிரேரணை மூன்றில் இரண்டு வாக்குகளைப் பெருமையால் தோல்வியடைந்தது.

தலைவர் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிப்பதற்காக இச்சபையின் விசேஷ கூட்டம் உள்ளூராட்சி உதவி அதிபர் திரு. என். சிவராசா தலைமையில் நேற்று நடைபெற்றது.

இப்பிரேரணையை 6-ம்வட்டார அங்கத்தவர் திரு. சே. அம்பலவாணரால் கொண்டு வரப்பட்டு 1-ம் வட்டார அங்கத்தவரன திரு. என். சபாரத்தினத்தினல் அனுமதிக்கப்பட்டது.

புதுடில்லி, மார்ச் 16

இந்தியாவில் கியூபா தூதராக ஸ்ரீ மானுவேல்ஸ்டோ நோவிகிராடு நியமிக்கப்பட்டுள்ளார் என்று இங்கு வெளிவிவகார மந்திராலயம் தெரிவித்துள்ளது.

# அல்ஜீரிய சண்டை நிறுத்த உடன்படிக்கை

## இன்று கைச்சாத்தாகும்?

பாரிஸ், மார்ச் 16

அல்ஜீரியாவின் எதிர்காலம் சம்பந்தமாக ஈவியானில் அல்ஜீரிய தேசியவாதிகளுக்கும் பிரெஞ்சு அரசாங்கப் பிரதிநிதிகளுக்குமிடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் நாளையுடன் முடிவடையலாமென்றும் சண்டை நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படக் கூடுமென்றும் நம்பப்படுகிறது.

அல்ஜீரியாவில் சண்டைநிறுத்தம் ஏற்பட்டு அல்ஜீரியாவில் சுதந்திர அரசாங்கம் அமைக்கப்படும் பொழுது மூன்று ஆண்டு காலம்வரை அல்ஜீரியாவில் பிரஞ்சுத் துருப்புக்கள் இருக்க வேண்டுமென்ற யோசனையை பிரஞ்சு அரசாங்கப் பிரதிநிதிகள் கைவிட்டுவிட்டதாகவும் ஒரு வருட காலத்துக்குமட்டுமே பிரஞ்சுத் துருப்புக்கள் அங்கு இருப்பார்களென்று அவர்கள் தெரிவித்துள்ளனராம்.

அல்ஜீரிய தேசிய ராணுவத்தின் நிலைமை பற்றித்தான் பேச்சுவார்த்தைகளில் இன்னும் உடன்பாடு ஏற்படவில்லையாம்.

# இரகசிய சமிக்ஞை

## அல்ஜீரிய தீவிரவாதிகள் திட்டம்

பாரிஸ், மார்ச் 16

அல்ஜீரிய விடுதலையை எதிர்க்கும் ஐரோப்பிய தீவிரவாதிகளின் இரகசிய ஸ்தாபனத்தினர் தங்கள் நடவடிக்கைக்கு இரகசிய சமிக்ஞையை காதும் காதும் வைத்தாற்போல் பரப்பிவருவதை அல்ஜீரிய மக்கள் அறிந்துள்ளனர்.

நீலம், வெள்ளை, சிவப்பு ஆகிய மூன்றுநிறங்களின் மூலம் இந்த சமிக்ஞை காண்பிக்கப்படும். நீல நிறம் வேலை நிறுத்தத்தையும், வெள்ளை நிறம் வெடி குண்டுகளையும், சிவப்பு நிறம் இரத்தத்தையும் குறிக்கும்.

அல்ஜீரிய சண்டை நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதும் இந்த சமிக்ஞைகள் மூலம் இயக்கம் ஆரம்பிப்பதற்கு இரகசிய ஸ்தாபனம் ஏற்பாடு செய்துள்ளது.

# மாநகரசபை அறிக்கை சமர்ப்பிக்கப்படமாட்டாது

## நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவேன் என்கிறார் காலி எம். பி.

கொழும்பு, வெள்ளி

'விசேஷ உத்தியோகஸ்தர் ஒருவரின் அறிக்கை பொதுமக்களின் அறிக்கை அல்ல. இதை காலி எம். பி.யிடம் கொடுக்க முடியாது.'

இவ்வாறு ஸ்தலஸ்தாபன வீடமைச்சு மந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. டயா டி. பாஸ்குவல் காலி எம். பி. திரு. தகநாயக்காவின் கேள்வியொன்றுக்குப் பதில் அளிக்கையில் கூறினார்.

காலி மாநகரசபை சம்பந்தமாக விசேஷ உத்தியோகஸ்தர் ஒருவர் ஸ்தலஸ்தாபன வீடமைச்சுக்கு சமர்ப்பித்த அறிக்கை பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென காலி எம். பி. கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே திரு. டயா மேற்கண்டவாறு கூறினார்.

திரு. டயா மேலும் இதுசம்பந்தமாகக் குறிப்பிட்டுத் தெரிவித்ததாவது:

காலி எம். பி.யிடம் இந்த அறிக்கை கொடுக்முகடியாது. எனவே இந்த அறிக்கையை பார்லிமெண்டிலும் சமர்ப்பிப்பதற்கான ஒழுங்கு செய்யப்படமாட்டாது.

திரு. தகநாயக்கா: இந்த அறிக்கையை மந்திரி தமக்குச் சொந்தமான சொத்து என நினைக்கிறாரா? இந்த அறிக்கை பார்லிமெண்டில் சமர்ப்பிப்பதற்கான ஒழுங்கைச் செய்யாதது சபாநாயகருக்கு அவமானத்தைத் தேடித்தருவதாக இருக்கிறது.

உள்ளூராட்சி தமக்குமட்டும் உரித்தானதென்று என மந்திரி எண்ணுகிறாரா? மகாநாம சமரவீரா ஒரு கீழ்த்தரமான "ராஸ்கலாக" நடந்து கொள்கிறார் என்பதை அவர் உணர வேண்டும்.

சபாநாயகர்: இதை வாபஸ் பெற வேண்டும்.

திரு. ரொபர்ட் குணவர்த்தன (எம். ஈ. பி.): தமது தொகுதி சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைப் பார்வையிடுவதற்கு குறிப்பிட்ட தொகுதியைச் சேர்ந்த எம். பி.க்கு உரிமையுண்டு.

### நம்பிக்கையில்லை

திரு தகநாயக்கா: இந்த அவமானச் சின்னமாக விளங்கும் மந்திரிமீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதற்கான முன்னறிவித்தல் கொடுக்கப் போகின்றேன்.

சபாநாயகர்: இதை நீர் வாபஸ்பெற வேண்டும்.

நீதிமந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. என். எச். ஏ. எம். கருணாரத்தின திரு. தகநாயக்காவைச் சுட்டிககாட்டி 'நீர் இதை வாபஸ் பெற வேண்டும். ஒரு கௌரவ மந்திரியை நீர் அவமதிக்க முடியாது.

சபாநாயகர்: (திரு. கருணாரத்தினவைப் பார்த்து) தயவு செய்து நீர் ஆசனத்தில் அமர்ந்து கொள்வீரா?

திரு. கருணாரத்தின: சரி, நான் அமருகிறேன்.

திரு. ரொபர்ட் குணவர்த்தன: உரிமைபற்றி நான் குறிப்பிட்டது சம்பந்தமாக திட்டவட்டமாக சபாநாயகர் தீர்ப்புக் கூறவேண்டுமெனக் கோருகிறேன்.

சபாநாயகர்: நீர் மந்திரியை வற்புறுத்த முடியாது.

திரு. குணவர்த்தன: நான் குறிப்பிட்டது பொதுமக்களின் தஸ்தாவேஜுகள்.

திரு. தகநாயக்கா: நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கான முன்னறிவித்தல் கொடுக்கவிருக்கின்றேன்.

பின்னர் திரு. என். எச். ஏ. எம். கருணாரத்தின சுகாதாரமந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசியின் சார்பில் பல கேள்விகளுக்குப் பதிலளிக்க எழுந்தார்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன (யு. என். பி.): இது ஒருவர் நடத்தும் அரசாங்கமா என்பதை விளக்கிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கருணாரத்தின: நான் எந்தவித தாக்குதலையும் ஏற்க தயாராகவிருக்கிறேன்.

### பாழாக்கப்படும் பால்

பெருமளவு நல்ல பால் ஒவ்வொருநாளும் வீணே ஊற்றப்படுகிறது என பத்திரிகைகளில் வெளியாகும் செய்தி பற்றி பார்லிமெண்டரிக் காரியதரிசி அறிவாரா என்று திரு. ஜெயவர்த்தன கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் திரு. கருணாரத்தின தெரிவித்ததாவது:

நாங்கள் பத்திரிகைகளின் பிரசுரங்களில் அதிக நம்பிக்கை வைப்பதில்லை.

குறிப்பிட்ட ஒரு அமைச்சினால் அல்லது இலாகாவினால் தகவல் கொடுக்கப்பட்டாலன்றி மற்ற செய்திகள்பற்றி நாம் நம்புவதில்லை. உங்களுக்கு பத்திரிகைகளில் நம்பிக்கை இருக்கலாம். ஆனால் எங்களுக்கு அவைகளில் நம்பிக்கையில்லை.

# கோலாலம்பூரில் நூதன மோசடிக் கும்பல்

கோலாலம்பூர், மார்ச் 15

வட்டிக்குக் கடன் கொடுப்பதாகக் கூறிக்கொள்ளும் நூதனமான மோசடிக் கும்பலொன்று கோலாலம்பூரில் இயங்கி வருவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

அத்தகைய மோசடியை நடத்தும் கும்பல் கடன் வாங்க விரும்பும் நபர்களுக்கு அச்சடிக்கப்பட்ட பாரம் ஒன்றைக் கொடுத்து பதிவுக்கட்டணமாக 3 வெள்ளி வசூலிக்கின்றார்கள். பதிவுக்காக இக்கட்டணம் வசூலிக்கப்படுகிறதென்று கூறி ஒவ்வொருமனுபாரத்திற்கும் தலா வெள்ளி 3 வசூல் செய்கின்றனர்.

அத்தகைய மனுவைஏற்றுக் கொள்வதா இல்லையா என்பதை அந்தக் கும்பலே நிர்ணயிக்குமாம்.

ஆனால்தலா 3 வெள்ளிவீதம் வசூலித்து சேகரிக்கப்பட்ட பல ஆயிரம் மனுக்கள் கடன் பெறத் தகுதியற்றவையாக்கப் பட்டுவிட்டதாக விஷயமறிந்த வட்டாரங்கள் கூறின. அவ்வாறு நிராகரிக்கப்பட்டதின் மூலம் ஏற்கெனவே பதிவுக்கட்டணமாகச் செலுத்தப்பட்டிருக்கும் தொகைகளை அந்தக் கும்பல் கைப்பற்றிக் கொள்கிறது.

கடன்தொகை கோருவதற்கான விண்ணப்ப பாரத்தில் ஒரு நபரின் தொழில் சம்பளம் போன்ற பல விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன.

அந்த மனுவில் இரு நபர்கள் ஜாமீன் கையெழுத்துப் போட வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளதாம்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பரிசீலனை செய்யப்பட்டு, ஏஜண்டுகளால்விசாரித்தறியப்பட்ட பின்னரேயே கடன் தொகை கிடைப்பது பற்றிய முடிவு தெரிவிக்கப்படுமெனக் கூறப்படுவதாகத் தெரிகிறது.

ஆனால் இதுவரையாருடைய கடன் தொகைக்கான விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று தெரிகிறது.

# காங்கோவில் ஷோம்பே

லியப்போல்ட்வில்லி, மார்ச் 16

கடாங்கா பிரிவினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக காங்கோ பிரதமர் திரு. அடௌலாவைச் சந்தித்துப் பேச்சுவார்தை நடத்துவதற்காக கடாங்கா அதிபர் திரு ஷோம்பே எலிஸபெத்வில்லியிலிருந்து விமானத்தில் லியப்போல்ட்வில்லி வந்து சேர்ந்தார்.

கடாங்காவிலுள்ள ஐ. நா. பிரதிநிதியும் திரு. ஷோம்பேயுடன் வந்து சேர்ந்தார்.

# ஆக்ராவில் திருமதி கென்னடி

ஆக்ரா, மார்ச் 16

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி திருமதி ஜாக்குலின் கென்னடி நேற்று ஆக்ரா வந்து சேர்ந்தார் விசேஷறயிலில்வார் துந்சேர்ந்த திருமதி கென்னடி நிலா வெளிச்சத்தில் தாஜ்மகாலைப் பார்த்துபரவசமடைந்தார்.

திருமதி கென்னடி இன்று வாரணாசி போய்ச் சேருகிறார்.

உத்தர பிரதேச அரசாங்கத்தின் சார்பில் பளிங்குக் கல்லினால் செய்யப் பட்ட 'தாஜ்மகால்' ஒன்றை திருமதி சுதேசா கிருபளானி திருமதி கென்னடியிடம் கொடுத்தார்.

# புலோலி பலநோக்கு சமாஜம்

## ரூ. 13,000 லாபம்

பருத்தித்துறை வெள்ளி

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜத்துக்கு கடந்த ஆண்டு நிகரலாபம் சுமார் 13ஆயிரம் ரூபாய்கிடைத்திருப்பதாக அதன் வருடாந்த அறிக்கைமூலம் தெரிய வருகிறது.

முன் செய்துகொண்ட முடிவுப்படி சமாஜ ஊழியர்கட்கு ஒரு மாத சம்பளத்தை சன்மானமாக வழங்குவதுடன் சமாஜ கௌரவ காரியதரிசிக்கும் மாதம் 80 ரூபாவீதம் அலவன்ஸ் வழங்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# பினங்கில் இந்திய இளம் பெண் மின்சாரத்துக்குப் பலி

பினங்கி, மார்ச் 16

28 வயதுள்ள லோகாம்பாள் என்ற இந்திய மாது நகரசபை தொழிலாளர் வீட்டு வரிசையில் உள்ள தனது இல்லத்தில் சமீபத்தில் மின்சாரத்தினால் தாக்குண்டு இறந்தார்.

அவருடைய இரு குழந்தைகளான 11 வயதுள்ள சுப்பிரமணியமும், 6 வயதுள்ள சுலோசனவும் அண்டை வீட்டுக்காரரான கோவிந்தம்மாளுடன் சேர்ந்து லோகாம்பாளுக்கு உதவி புரியச் சென்றபோது மின்சார அதிர்ச்சியால் தாக்குண்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

லோகாம்பாளின்கணவரான 34 வயதுள்ள திரு. பி. ராமையா வேலைக்குப்போயிருந்தபோது இச்சம்பவம்நிகழ்ந்தது ஒரு நண்பர் மூலம் தகவல் அறிந்த திரு. ராமையா தன் வீட்டிற்குத் திரும்பியபோது அங்கு பெரிய கூட்டம் கூடியிருந்தது. தன் மனைவி இறந்து விட்டதை அவர் கண்டார்.

லோகாம்பாள் தன் அறையிலிருந்து குளிக்கும் அறைக்குச் செல்ல விரும்பினார் என்று தெரிகிறது. குளிப்பு அறையின் குறுக்கே துணிகள் காயப் போடுவதற்காக ஒரு கம்பி கட்டப்பட்டிருந்தது. அந்தக் கம்பி எப்படியோ மின்சாரக் கம்பியுடன் தொட்டுக்கொண்டிருந்தது என்று நம்பப்படுகிறது.

லோகாம்பாள் தொங்கிக் கொண்டிருந்த கம்பியைத் தள்ளியபோது அவர் மின்சாரத்தால் தாக்குண்டு இறந்துவிட்டார்.

# மேற்கு இரியன் விவகாரம்

## அமெரிக்காவில் பேச்சுவார்த்தை

வாஷிங்டன், மார்ச் 16

மேற்கு இரியன் விவகாரம் சம்பந்தமாக இந்தோனேஷியாவும் டச் அரசாங்கமும் பூர்வாங்க பேச்சு வார்த்தை நடத்த இணங்கியுள்ளன. இப்பேச்சு வார்த்தைகள் விரைவில் அமெரிக்காவில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

# 22 வது குண்டு பரீட்சை

கேப்கனவரால், மார்ச் 16

நெவாடாவில் நேற்று அமெரிக்க விஞ்ஞானிகள் மற்றொரு அணு ஆயுதத்தை நிலத்துக்கு அடியில் பரிசோதனை செய்தனர். குறைந்த சக்தியுள்ள இந்த அணு ஆயுதம் அமெரிக்காவின் இப்போதைய பரீட்சைத் தொடரில் 22 வதாகும்.

# வவனியாவில் தேசிய சேவை

வவனியா, வெள்ளி

வவனியா தமிழ் மகா வித்தியாலயத்திலுள்ள மாணவர்களும் ஆசிரியர்களும் தேசிய சேவையில் ஈடுபட்டனர். இவர்கள் பாடசாலை வளவு, விளையாட்டு மைதானம், என்பவற்றைத் துப்புரவு செய்தல், அறைகளிலுள்ள தூசி என்பவற்றைத் துடைத்தல். மேட்டு நிலங்களை வெட்டிப் பதித்த இடத்துக்கு மண் போடுதல் என்பவற்றில் மிக ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

# பணிஸ் விநியோகம் செய்தவர்

## பணம் பெற வில்லையாம்

மரவில்லை, வெள்ளி

கொஸ்வத்தை அரசாங்க பாடசாலைக்கும் மீமகவில்லை அரசாங்க பாடசாலைக்கும் சென்ற வருடம் பணிஸ் விநியோகம் செய்த பேக்கரிக்காரர் அவர் விநியோகம்செய்த பணிஸுக்கான பணத்தை இன்னும்பெறவில்லையாம்.

இது சம்பந்தமாக குருநாகலையிலுள்ள கல்விகாரியாலயத்துக்கு பல தடவைகள் அறிவித்திருந்தும் இன்னும் ஒரு பதிலும் தமக்குக் கிடைக்கவில்லையென பணிஸ் விநியோகம் செய்தவர் தெரிவித்துள்ளார்.

கொஸ்வத்தை அரசாங்க பாடசாலை அதிபருக்கு இது பற்றி அறிவித்ததற்கு அவர் இதே காலத்தில் பால் விநியோகம் செய்தவருக்கும் இன்னும் கல்விக்காரியாலயம் பணம்கொடுக்கவில்லையென்று தெரிவித்துள்ளாராம்.

# "கந்தையா ஞாபகார்த்தக் கட்டடம்"

உடுப்பிட்டி, வெள்ளி

இப்பொழுது புலோலி அரசினர் வைத்தியசாலையின் ஒரு பகுதியாக விளங்கும் இரு புதிய கட்டிடங்கள் முன்னாள் பருத்தித்துறை எம். பி. திரு. பொன். கந்தையாவின் முயற்சியால், அவரது காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டமையால் அவ்விரு புதிய கட்டிடங்களையும் "பொன். கந்தையா ஞாபகார்த்தக்கட்டடம்"எனப் பெயரிடுமாறு வடமராட்சி மக்கள் இன்று கௌரவ சுகாதார அமைச்சருக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றிற் குறிப்பிட்டுள்ளனர்.

# அணு சக்தி விஞ்ஞானி மரணம்

கலிபோர்னியா, மார்ச் 16

அமெரிக்க அணுசக்தி விஞ்ஞானிகளுள் ஒருவரான டாக்டர் கம்ப்டன் தமது 64-வது வயதில் நேற்று இங்கு காலமானார்.

மணி வாக்கு

வேறு மனிதர்களின் உதவியைக் காட்டிலும் ஆண்டவனுடைய உதவி எவ்வளவோ பெரிது.

—விவேகானந்தர்.

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு பங்குனி மீ 4 உ (17-3-62)

## துறைமுக அபிவிருத்தி

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி சம்பந்தமாக மீண்டும் அரசாங்கம் அக்கறை கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதே. இம்மாதிரியான ஒரு செய்தி 1959-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலும் பத்திரிகைகளில் வெளியாயிற்று. திரு. எஸ். நடேசபிள்ளை அமைச்சராக இருந்தபோது காங்கேசன்துறை துறைமுகத்தை விருத்தி செய்வதற்கென அடையாள மான்யமும் பார்லிமெண்டில் அனுமதிக்கப்பட்டதையே இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். எனினும் துறைமுக விருத்திக்காகச் செயல் முறையில் எதுவும் நடைபெறவில்லை. எல்லாம் பேச்சளவிலும் எழுத்தளவிலுமே நின்றுவிட்டன. எனவேதான், காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி சம்பந்தமாக பூர்வாங்க வேலைகளுக்கு 10 லட்சம் உபமான்யப் பிரேரணை ஒன்றை தொழில் தேசிய சேவை மந்திரி பார்லிமெண்டில் சமர்ப்பித்துள்ளார் என அறிந்தபோது இத்திட்டத்துக்கும் பழைய கதிதான் ஏற்படுமோ என்ற எண்ணம் மக்களிடையே ஏற்படுவது இயல்பே.

காங்கேசன்துறை சிமெந்து கார்ப்பரேஷன் அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாகத் துறைமுக அபிவிருத்தித் திட்டம் இம்முறை தயாரிக்கப்பட்டிருப்பதால் அரசாங்கம் இதில் அக்கறை கொண்டிருப்பதாகவே கருதவேண்டியிருக்கின்றது. துறைமுகங்கள் நாட்டின் எப்பகுதிகளில் இருந்தாலும் அவற்றால் பெருந்நன்மையே ஏற்படுமென்பதை எவரும் ஒப்புவர். ஆனால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் அபிவிருத்தி சம்பந்தமாக அரசாங்கம் மாற்றாந்தாய் மனப்பான்மையாக இருந்து வருவது ஏனோ? இந்நிலைமைமாறி துறைமுக அபிவிருத்தி போன்ற திட்டங்களில் இப்போது கவனம் செலுத்த முற்பட்டிருப்பது ஒரு நல்ல அறிகுறியாகும்.

கொழும்புத் துறைமுகம் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்டிருப்பினும் நெருக்கடிகள் ஏற்படும் வேளைகளில் அவற்றைச் சமாளிப்பது இயலாதாகின்றது. அவசரகாலச் சட்டம் நாட்டில் நிலவிய போது வடபகுதிக்கு உணவு வகைகளைக் கொழும்பிலிருந்து அனுப்புவதில் அரசாங்கம் மிகுந்த சிரமத்துக்குள்ளாயிற்று. சில கப்பல்கள் திருக்கோணமலைத் துறைமுகத்துக்கு அனுப்பப்பட்டன. அங்கிருந்தே வடபகுதிக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் உணவுவகைகளை அனுப்ப முடிந்தது. சில மாதங்களுக்கு முன்னரும் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு உணவுக் கப்பல்கள் அனுப்பப்பட்டதையும் இங்கு நினைவூட்ட விரும்புகின்றோம். ஆகவேதான் சகல துறைமுகங்களும் அபிவிருத்தி செய்யபபட்டால் இத்தகைய நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். காங்கேசன்துறை துறைமுகத்தை நவின வசதிகளுடைய துறைமுகமாக அமைத்தால் வர்த்தக விருத்திக்கும் பிரயாணிகளின் போக்குவரத்துக்கும் உதவி செய்வதாகும். மூக்கை நேரே தொடுவதற்குப் பதிலாகத் தலையைச் சுற்றி வளைத்துத் தொடுவதுபோல் பக்கத்தில் உள்ள இந்தியாவுக்குப் போவதென்றாலும் அதிக தூரப்பிரயாணத்தை இப்போது மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. வானவெளியில் மனிதன் அற்புதங்களைச் சாதித்துவரும் இக்காலத்தில் கடற் பிரயாணம் செய்வதிற்கூடத் தடைகளும் தாமதங்களும் ஏற்படுமாயின் எந்த நாடும் துரிதமாக முன்னேற முடியாது. காங்கேசன்துறை துறைமுகத்தை அரசாங்கம் காலம் தாழ்த்தாது திறந்துவிடுமானால் துறைமுக நெருக்கடியைக் குறைப்பதுடன் நாட்டின் பொருளாதார விருத்திக்கும் துணைபுரிவதாகும். அத்துடன் வட மாகாண விருத்தியில் உண்மையாகவே அரசாங்கம் அக்கறை காட்டி வருகின்றதென்ற நம்பிக்கையையும் அரசாங்கம் பெறக் கூடியதாய் இருக்கும் எனலாம்.

# பாடசாலைகளை அரசினர் எடுக்கலாம்
# ஆனால் தியாக உணர்ச்சியை எடுக்கமுடியாது
## தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பரிசளிப்புவிழாவில் அதிபர் அறிக்கை

தெல்லிப்பழை, வெள்ளி

'எங்கள் ஆயுள் எல்லைக்குட்பட்ட காலத்தில் கல்வித்துறையில் ஏற்பட்ட மிக முக்கியமான நிகழ்ச்சி பாடசாலைகளை அரசினர் பொறுப்பேற்றுக் கொண்டமையேயாகும். கல்வியில் விருப்புடையோர் போற்றக்கூடிய வகையில் பிள்ளைகளின் எதிர் காலத்தினையும் நாட்டின் நலனையும் கருத்திலே கொண்டுநாட்டிலேபெரியமாறுதல்கள் ஏற்படும் இந்நாளில் தேசியத்தை வளர்க்கும் நோக்கோடு அரசினர் பாடசாலைகளைக் கையேற்றமை போற்றுதற்குரியது'

இவ்வாறு தெல்லிப்பழை யூனியன் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் கல்லூரி அதிபர் திரு. ஐ. பி. துரைரத்தினம் சமர்ப்பித்த தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அவர் தமது அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:—

இந்த மாற்றத்தினால் கல்வியின் தரம், ஒழுக்கம் என்பன வீழ்ச்சியடையும் என்று சிலா பயப்படுவது துரதிருஷ்டமாகும். பாடசாலைகளை அரசினர் பொறுப்பேற்பதினால் விளையும் கல்வித்தரத்தின் குறைவு தவிர்க்கமுடியாது என எண்ணுவது தவறு. அரசினர் பாடசாலைகளை எடுக்கலாம். ஆனால் எங்கள் கடமையுணர்ச்சியையும் தியாகஉணர்ச்சியையும் எடுத்துவிடமுடியாது. முகாமை மாறினாலும் எதைக் கற்பிக்கவேண்டும், எவ்வாறு கற்பிக்கவேண்டும் என்பன எம்மைப் பொறுத்தவையே. இதுகாறும் எம்மை உழைக்கும் வண்ணம் எந்த இலட்சியம் ஊக்கப்படுத்தியதோ அதனையே நாம் மனதிற்கொண்டு எமது கடமையைச் செய்ய வேண்டும்.

### தேசிய சேவை

சமீபகாலங்களில் கல்விப் பகுதியினரால் செய்யப்பட்ட போற்றக்கூடிய செயல்களுள் தேசிய சேவையைப் புகுத்தியதும் ஒன்றாகும். மாணவர் தோட்டவேலைகளிலும், மாணவிகள் சுத்தம்செய்தல், வர்ணம் பூசுதல் ஆகியவற்றிலும் தமது திறமையினை வெளிப்படுத்துகின்றனர். ஆசிரியர் மேற்பார்வையின்றித் தாமே பொறுப்பாக நடந்துகொள்ளுதல், கல்லூரிப் பொருள்களில் கண்காணிப்பு, தொழிலில் ஊக்கம் ஆகிய பண்புகள்தென்பட்டன. சமூக ஒற்றுமையினையும் பொறுப்புணர்ச்சியையும் ஊட்டும் சாதனமாக தேசியசேவை அமைந்துள்ளது. பல்வேறு துறைகளில் மாணவர்கள் தொழில்பெறக்கூடிய முறையில் பயிற்சியளிப்பதுமட்டுமன்றி சமூகத்திடையே விரிந்த நோக்கையும், பொறுப்புணர்ச்சியையும் வளர்ப்பதாகவுள்ளது.

### ஆசிரியரின் பொறுப்பும் வரலாற்றுப் பத்திரமும்

மாணவர் வரலாற்றுப் பத்திரம் பற்றிப் பலர் குறைகூறியுள்ளதை நாம் கேள்விப்பட்டுள்ளோம். இதனைத் தயாரிப்பதில் சற்றுச் சிரமமுண்டு. மாணவரை நல்வழிப்படுத்துவதற்கு இது ஒரு சிறந்த கருவியாகும். பல பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு வழிகாட்டக்கூடிய நிலையில் இல்லை. சில ஆசிரியர்கள் வகுப்பறைக்குள் நூலைக் கற்பிப்பதோடு மாணவருக்கும், தமக்கும் உள்ள தொடர்பு அற்றுவிட்டதாகக் கருதுகின்றனர். ஆரம்பவகுப்புத் தொடங்கி உயர்வகுப்பு வரையும் கல்விகற்கும் மாணவன் ஆசிரியரின் உதவியையோ, பெற்றோரின் வழிகாட்டுதலையோ பெறாவிட்டால் இருட்டறையில் உலவுபவனாகின்றான். மாணவனை ஆசிரியரும் ஏனையோரும் நன்கு அறிந்துகொள்ள உதவுவதே வரலாற்றுப் பத்திரத்தின் நோக்கமாகும். மாணவரின் பல் வகைப்பட்ட நிலைகளில் நடந்துகொள்ளும் முறைமைபற்றிய விபரம் அம்மாணவரின் உண்மைத்தன்மையை உணர உதவி புரியும்.

இரத்தினக் கம்பளம்

## 'சன்டே சுண்டல்'

பதுமன்

ஆமைகளுக்குநல்லகிராக்கி ஏற்பட்டிருக்கின்றதெனப் பதுமனார் இங்கு சிலவாரங்களுக்கு முன்னர் எழுதியபோது, யாழ்ப்பாணத்திலுள்ள ஆமை இறைச்சிப் பிரியர்களுக்குவயிற்றில் அடிவிழும் என்று அவர் கனவிலும் கருதவில்லை!

ஆமை இறைச்சிக்கு ஐரோப்பிய நாடுகளில் நல்ல வரவேற்பு இருப்பதாகவும், அதைப் பத்திரப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு வர்த்தக ஸதாபனம் ஒன்று முயற்சி செய்து வருவதாகவும் இங்கு குறிப்பிட்டிருந்தேன். எழுதிய மை உலர முன்னரே ஆமை பிடிப்பவர்கள் தமக்கு அடிக்கவிருக்கும் யோகத்தை எண்ணிப்போலும் வீட்டிலே சும்மா இருந்துகொண்டனர். இதனால் யாழ்ப்பாணத்தில் ஆமை இறைச்சி இப்போது மருந்துக்குத்தானும் கிடைப்பதில்லை என ஒருவர் விசனத்துடன் தெரிவித்தார்.

●

### அதன் சுவை

வட பகுதியிலுள்ளவர்களிற் பலர் ஆமை இறைச்சியையும் கள்ளையும் விரும்பி உண்பவர்கள் என்று கொழும்பிலுள்ள ஆங்கிலத் தினசரி ஒன்று சுவையாக எழுதியிருப்பதை அவர் எடுத்துக் காட்டி, ஆமை இறைச்சியின் அருமை பெருமைகளை எல்லாம் ஒவ்வொன்றாக அடுக்கிக்கொண்டே போனார்.

யாழ்ப்பாணத்தில்வீட்டுவாசலிலேயே ஆமை இறைச்சி கிடைக்குமெனவும் அதற்காக நெடுந்தூரம் அலையவேண்டியதில்லையெனவும் அவர் தெரிவித்தார். சின்னக்கடைப்பக்கம் ஒருவர் போகவேண்டியதுதான் தாமதம். ஆமை இறைச்சி விற்கும் பெண்கள் அவரைப் பிடித்து இழுத்து துடிதுடிக்கும் இறைச்சித் துண்டுகளை அவருக்கு விற்றுவிட்டுத் தான் மறுகாரியம் பார்ப்பார்களாம்.

●

### ஞாயிறு விருந்து

ஞாயிற்றுக்கிழமை எல்லோருக்கும் ஓய்வு நாளாகையால் கள்ளை நன்றாக அருந்திவிட்டு மனைவிகைப்பட ஆக்கும் ஆமை இறைச்சிக் கறியை உண்டு களிப்பது இங்கு சிலரின்வழக்கம்.

ஆமை இரத்தம் உறைந்த பின்னர் அதிற் சுண்டல் தயார் செய்து கடைகளில் விற்பார்களெனவும், ஞாயிற்றுக்கிழமைகளில் சுண்டலுக்குக் கிராக்கி அதிகமெனவும் சுண்டல் பிரியர் ஒருவர் கூறுகின்றார். 'சன்டே சுண்டல்' என இதற்குப் பெயரிடப்பட்டிருப்பதாகவும் அறிகிறேன். ஆங்கிலத்தில் 'சண்டே' என்றால் ஞாயிற்றுக்கிழமை என்பது உங்களுக்குத் தெரியுந்தானே!

சுண்டலுடன் உண்டபின்னர் யாழ்ப்பாணம் திறம்சுருட்டைப் பிடித்துக்கொண்டு சாய்மனைக் கதிரையில் உறங்குவதே ஒரு தனி இன்பம் என்றால் பாருங்களேன்!

●

### நஞ்சுண்பவர்

ஆமை இறைச்சியை ஆக்கி உண்பதைப் பற்றி எமக்குக் கவலை இல்லை. ஆனால் இந்நாட்களில் யாழ்ப்பாணத்தில் கள் உண்பவர்களின் தொகை அதிகரித்துவிட்டதாகவும்,காரியாலயத்துக்கு கடமையாற்றச் செல்பவர்களே அதிகாலையில் ஒன்றோ இரண்டோ. குளிர்மையாகப் போட்டபின்னர் தான் திருப்தியடைகின்றார்கள் எனவும் வேறோர் அன்பர் தெரிவித்தார். பள்ளிக்கூட மாணவர்களிடையேயும் குடிப்பழக்கம் பெருகிவருவதை அறியும் போது "ஐயோ! யாழ்ப்பாணமே!" என்றுதான் அலறவேண்டி இருக்கின்றது. கள்ளுண்பவர்கள் நஞ்சுண்பவர்கள் என்பதை அவர்கள் அறிந்தால் ஒருவேளை திருந்தவும கூடும்.

## இரண்டுக்கும் உரிமை இல்லை
### நேரு கருத்து

புதுடில்லி, மார்ச் 15

"சிங்கியாங்கிக்கும் பாகிஸ்தான் வசமுள்ள ஆஸாத் காஷ்மீருக்கும் இடையில் உள்ள எல்லை பற்றி பாகிஸ்தானும் சீனவும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அவைகளுக்கு உரிமை கிடையாது" என்று பாரதப் பிரதமர் நேரு இன்று லோகசபையில் கூறினார்.

இதற்கு முன் ஒரு கேள்விக்கு வெளிவிவகார உதவி மந்திரி திருமதி லட்சுமிமேனன் பதிலளிக்கையில் காஷ்மீர் பிரச்னை பற்றி விவாதிப்பதற்கு பாதுகாப்புச் சபை இன்னும் திகதி நிர்ணயிக்கவில்லையென்றார்.

## பிரி. கயானவுக்கு சுதந்திரம்
### காலனி இலாகா உதவி மந்திரி சமபாஷணைகள்

ஜார்ஜ்டவுன், மார்ச், 16

பிரிட்டிஷ் கயானவுக்கு சுதந்திரம் அளிப்பது சம்பந்தமாக காலனி இலாகா உதவிமந்திரி ஸ்ரீ ஹியூபிரேஸர் இங்கு பிரதம மந்திரி செட்டிஜகனுடனும் எதிர்க்கட்சிகளின் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறார்.

மே மாதத்தில் இதுசம்பந்தமாக லண்டனில் நடைபெறவிருக்கும் சம்பாஷணைகளில் கலந்து கொள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்களாம்.

## ஐயாறன் எழுதுவது

வண்ணை வைத்தீச்வரன் கோவில் உற்சவம் இம்முறை மிக சிறப்பாக நடந்து வருகிறது. முதல் சில நாட்களில் சுவாமி பவனி வருகையில் கூட்டம் அதிகமில்லை. சுவாமிக்குப் பின்னால் சில அன்பர்கள் சேர்ந்து தேவாரம், பஜனவளி முதலியவற்றைப் பக்தியுடன் தினசரி பாடிவருகிறார்கள். கூட்டம் அதிகமில்லை என்றும், சினிமாச்சாலைகளிலேயே கூட்டம் அதிகமாக இருப்பதாயும் ஓர் அன்பர் ஏமாற்றதுடன் கூறினார்.

ஆனால் சென்ற புதன்கிழமை யானை வாகனத்தன்று, நல்ல கூட்டம் அலங்காரமும் மனதைக் கவர்வதாக இருந்தது. நாதசுர வாத்தியமும் செவிக்கு விருந்தளித்தது. நல்ல நாதசுரக்காரர்களை வரவழைத்து வாசிக்கச் செய்தால், கூட்டம் தானக, தேனை வண்டுதேடி வருவதுபோல் வரும். இவ்வித உற்சவங்களை நடத்துபவர், நல்ல கலைஞர்களை அமர்த்த வேண்டிய தவசியம். நன்மை இருந்தால் மக்கள் விடமாட்டார்கள்.

* * *

வண்ணை வைத்தீச்வரவித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஆறுமுகமும், இக்கோவிலில் உற்சவ ஆரம்பமுதல் ஒவ்வொரு நாளும், திருஞானசம்பந்தரின் சரித்திரத்தை சங்கீத கதாகாலட்சேபமாக செய்கின்றார். ஆண்களும் பெண்களுமாக பலர் வந்து கேட்டு இன்புறுகிறார்கள். சபாஷ்!

கோவில் உற்சவங்களில் இப்போது சின்ன மேளம் குறைந்து, சங்கீத கதாகாலட்சேபங்கள் அதிகரித்துவருவதாக நண்பர் ஒருவர் கூறுகிறார். இது உண்மையாயின் வரவேற்கத்தக்க நல்ல மாறுதலாகும்.

* * *

ரஷ்யாவிலிருந்து முதல் முதலாக இலங்கை பெட்ரோலியம் கார்ப்பரேஷனுக்கு கப்பலில் வந்த எண்ணெயை, மந்திரிகளும் பார்லிமெண்ட் மெம்பர்களும் வரவேற்றிருக்கிறார்கள். பார்லிமெண்ட் கூட்டத்தைக்கூட இதற்காக சற்றே ஒத்திவைத்து, திருவிழா போல் இந்த வரவேற்பு வைபவம் நடந்துள்ளது.

பௌத்த பிக்குகள், "பிரித்" ஓதி, எண்ணெய் கார்ப்பரேஷனுக்கு "தெய்வங்களின்" ஆசி கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்துள்ளார்கள். அடே அப்பா! இந்த எண்ணெயின் சக்திதான் எவ்வளவு!

சமீபத்தில் பர்மாவிலே இராணுவப் புரட்சி நடந்ததல்லவா? அதற்கு உண்மையான காரணம் எண்ணெய்தான் என்று சொல்லப்படுகிறது. அங்கு" பர்மாஷெல்" கம்பெனியில்அரசாங்கத்துக்கு51சத பங்கும், கம்பெனிக்கு 49 சதபங்கும் உண்டு. அக்கம்பெனியை தேசஉடைமையாக்க, ஊநூவின் அரசாங்கம் பயமுறுத்திக் கொண்டிருந்தது. ஆனால் புதிய இராணுவ அரசாங்கம் வந்ததும், எண்ணெய் தேசஉடைமை ஆக்கப்படமாட்டாதென்று அறிவித்துவிட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

## பின்லாந்து புதுஅரசாங்கம்

ஹெல்ஸின்கி, மார்ச், 16

பின்லாந்து நாட்டுக்கு புதிய அரசாங்கத்தை அமைக்குமாறு அந்நாட்டு ஜனதிபதி உர்ஹோ கெக்கோனன், பேராசிரியர் வெலிகெரிகோஸ்கியை கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீ கெரிஹோஸ்கி சோஷலிஸ்டு அல்லாத மெஜாரிட்டி அரசாங்கத்தை அமைக்கக் கூடும்.

# நேப்பாளத்துக்கு ஆயுதங்கள் போகாமல் தடுக்க உத்தரவு

## பிரதமர் நேரு அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 10

"இந்தியாவிலிருந்து நேப்பாளத்துக்கு ஆயுதங்களும் வெடிமருந்துகளும் போகாமல் தடுப்பதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" என்று பிரதமர் நேரு இன்று லோகசபையில் அறிவித்தார்.

நேப்பாளத்தில் அரசாங்கத்திற்கெதிராகக் கிளர்ச்சி செய்தவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் இந்திய ஆயுதங்களும் இருந்ததாக நேப்பாள வெளி விவகார மந்திரி தெரிவித்திருந்ததை லோகசபையில் ஒரு அங்கத்தவர் சுட்டிக் காட்டியபோதே பிரதமர் நேரு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய - நேப்பாள எல்லை மிக விசாலமானது. இந்த எல்லையினூடாக இந்தியாவிலுள்ள நேப்பாளிகள் ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் கொண்டு செல்லக் கூடும். பெருமளவில் இந்தியாவிலிருந்து ஆயுதங்களும் வெடிமருந்துகளும் நேப்பாளத்துக்குள் கொண்டுசெல்லாதவாறு தடுக்கும்படி எல்லையிலுள்ள அதிகாரிகளுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டளைகள் சிறிது கூட பிசகாமல் நிறைவேற்றப்படும்" என்று பிரதமர் நேரு கூறினர்.

நேப்பாள ராணுவத்துக்கு இந்தியா ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் விநியோகம் செய்து வந்திருக்கிறதென்றும் பிரதமர் தெரிவித்தார்.

இந்தியாவிலுள்ள நேப்பாளியர்கள் இந்திய நாட்டின் சட்டவிதிகளை மீறினல் அவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படுவார்களென்பதை நேப்பாள அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கம் முன்னரே அறிவித்துள்ளதென்று உதவி வெளி விவகார அமைச்சர் திருமதி லட்சுமி மேனன் கூறினர்.

இந்தியாவிலிருந்துகிளர்ச்சிக்காரர்களுக்கு ஆயுதங்களும் வெடிமருந்துகளும் கிடைத்தனவென்று நேப்பாள மந்திரி தெரிவித்ததற்கு ஆட்சேபம் தெரிவித்து அரசாங்கம் ஒரு குறிப்பு அனுப்பியிருந்ததென்றும் அதில் நேப்பாள மந்திரியின் குற்றச்சாட்டு மறுக்கப்பட்டதென்றும் திருமதி மேனன் கூறினர்.

# வெளிநாட்டுப் பட்டதாரிகளின் 7 கோரிக்கைகள்

## திரு. கெனமன் தலைமையில் கல்வி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், சனி

வெளிநாட்டு பட்டதாரிகள் சங்கத் தூதுகோஷ்டியொன்று திரு. பீட்டர்கெனமன் எம். பி தலைமையில் மிக விரைவில் கல்வியமைச்சரைப் பேட்டி காணவிருக்கிறது. சங்கத்தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு, காரியதரிசி திரு. என். செல்லத்துரை உட்பட ஐவர் இக் கோஷ்டியில் செல்லவிருக்கின்றனர்.

இத்தூதுகோஷ்டி கல்வி அமைச்சரிடம் சமர்ப்பிக்கவிருக்கும் 7 கோரிக்கைகள் பின்வருமாறு:-

வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளிலும் பார்க்க இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு முதலிடம் கொடுக்கும் கல்வி இலாகாவின் அண்மைக் காலத்திய கொள்கையை மாற்றம் செய்ய வேண்டும்.

அரசாங்கத்தால் எல்லாப் பட்டதாரிகளுக்கும் வேலை கொடுக்கமுடியாவிட்டால் அவர்கள் பிறநாடுகளில் உத்தியோகம் தேடும் உரிமையை தடை செய்யும் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும்.

எந்தப் பாடசாலைகளிலும் உள்ள ஆசிரியர்களில் 50 வீதத்திற்கு அதிகமானேர் பட்டதாரிகளாக இருத்தலாகாது என்ற சட்டத்தை ரத்துச் செய்தல் வேண்டும்.

கல்வி இலாகாவில் உத்தியோகம் பெறுவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த தொழிலற்ற பட்டதாரிகள் பட்டியலைநீக்கியதாக இலங்கை அரசாங்க வர்த்தமானியில வெளி வந்த தீர்மானத்தை இரத்துச் செய்தல் வேண்டும்.

கல்வி இலாகாவின் கீழ் வேலை தேடி நிற்கும் வேலையற்ற பட்டதாரிகளின் பதிவு ஜாபிதா ஒன்றை தயாரித்து பட்டதாரிகள் பட்டம் பெற்ற ஆண்டுகளின் நிரைப்படியே உத்தியோகம் பெற நடவடிகை எடுகக வேண்டும்.

கல்வி இலாகாவினல் சிங்கள மொழிப்பயிற்சி அளிக்கப்பட்ட 61 விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கு உடனடியாக வேலை கொடுக்க வேண்டும்.

குறிக்கப்பட்ட காலத்துக்குள் அரசகரும மொழியில் தேர்ச்சி பெற ஆயத்தமாக இருக்கும் பட்டதாரிகளை முஸ்லிம், சிங்களப்பாடசாலைகளில் நியமிக்க வேண்டும்.

# நல்லூர் தமிழ் ஆசிரியர் சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், வெவ்ளி

நல்லூர் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை மாலை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் திரு. இ. க. தியாகராசா தலைமையில் நடைபெற்றது.

இச் சங்கத்தை வட இலங்கைத் தமிழாசிரியா சங்கத்துக்கு ஊடாக அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்துடன் இணைப்பதெனவும் இயலாதவிடத்து தனிச் சங்கமாக இயங்க வேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது.

உத்தியோகத்தர் தெரிவின்போது தலைவராக திரு. இ. க. தியாகராசாவும், உபதலைவர்களாக திருவாளர்கள் சீ. எஸ்தாக்கி, இ. சிதம்பரப்பிள்ளை, திருமதி இ. அன்னலிங்கம் ஆகியோரும், காரியதரிசியாக திரு. சீ. நவரத்தினமும், உதவிக் காரியதரிசியாக திரு. சோ. அமிர்தலிங்கமும், தனதிகாரியாக திரு. இ. தங்கராசாவும், கணக்குப் பரிசோதகராக திரு. வ. நமசிவாயமும் தெரிவுசெய்யப்பட்டனர். நான்குபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## தமிழ் எழுத்தாளருக்கு தனிநாயகம் அறிவுரை

சென்னை, மார்ச் 16

தமிழாராய்ச்சி, கலாசாரம் ஆகியவற்றை ஊக்குவிப்பது தமிழ்நாட்டு எழுத்தாளர்கள், தமிழ்நாடுஅரசாங்கம் மேற்கொள்ளவேண்டிய பொறுப்பு என்றும், கடல்கடந்த தமிழர்கள் மீது அந்தப் பொறுப்பை சுமத்துக்கூடாது என்றும் மலேயா சர்வகலாசாலையில் இந்தியக் கலைப்பிரிவுப் பேராசிரியர் சேவியர் தனிநாயகம் இன்று தெரிவித்தார்.

தமிழ் எழுத்தாளர்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

தற்போது தமிழ் எழுத்தாளர்களிடையே காணப்படும், ஒதுங்கிநிற்கும் மனப்பான்மை குறித்து அவர் வருத்தம் தெரிவித்தார். தமிழிலக்கியம், தமிழ் மரபு ஆகியவற்றின் பெருமையை வளர்த்துவரும் அதேசந்தர்ப்பத்தில் பிற கலாசாரங்களைப்பற்றியும் அவர்கள் ஒப்பு நோக்கி ஆராயவேண்டுமென்ருர்.

தமிழில் ஆங்கிலப்பதங்களையும் கலந்து எழுதிவருவதன் விளைவாக தமிழ்நாட்டின் தனித்தன்மை மறைந்துவிட்டது என்ருர்.

## ஆப்கன் இசைக் கோஷ்டி

சென்னை, மார்ச் 16

ஆப்கானிஸ்தானிலிருந்து 9 பேரடங்கிய இசை வல்லுனர்கள் கோஷ்டி ஒன்று சென்னைவரும். வருகிற 29, 30-ம் தேதிகளில் இக் கோஷ்டி இசைவிருந்தளிக்கும்.

## காங்கேசன்துறையில் மத்திய தொலைபேசி நிலையம்

காங்கேசன் துறை, வெள்ளி

காங்கேசன் துறையில் ஓர் மத்திய தொலைபேசி நிலையம் அமைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடுகள் செய்து வருகிறது. இது தொடர்பாக சில மேலதிகாரிகள் கொழும்பிலிருந்து புதிய கட்டிடங்கள் அமைக்கப்படவிருக்கும் நிலத்தைப் பார்வையிட்டு போயினர்.

ஓர் புதிய தபால் நிலையம் கட்டுவதற்கு அரசாங்கம் கீரிமலை வீதியில் ஓர் நிலம் ரூ. 20,000 வுக்கு விலைக்கு வாங்கியிருக்கிறது.

இந் நிலத்துக்கு அருகிலேயே தொலைபேசி மத்திய நிலையம் அமைப்பதற்கும் தேவையான நிலம் எடுக்கப்படுகிறது.

## காதுக்கு பதில் பற்கள்!

லண்டன், மார்ச் 16

பற்களில் ஒரு சிறு ஒலிபெருக்கிக் கருவியை வைத்துக் கொண்டால் செவிடர்களுக்கு நன்ருகக் காது கேட்கும் என்று பிரிட்டிஷ் விமானப் படை வைத்தியர் ஒருவர் கூறுகிருர். இத்துறையில் மேற்கொண்டு ஆராய்ச்சிகள் நடத்துவதற்கு அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

## கொலம்பியாவில் நிலச்சரிவுகள் 25 பேர் பலி

போகோடா (கொலம்பியா) மார்ச் 16— கொலம்பியாவில் போகோடா என்னுமிடத்திலிருந்து 100 மைல் வடக்கே அனிஸால்ஸ் என்னுமிடத்துக்கருகில் சென்ற சனிக்கிழமையன்று மூன்று நிலச்சரிவுகள் ஏற்பட்டன. இதில் 25 பேர் மாண்டனர்.

நிலச்சரிவுகளினல் ரஸ்தா போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## ஸாவூதி மந்திரி சபை

லண்டன், மார்ச் 16

ஸாவூதி அராபியாவின் புதிய மந்திரிசபையில் மன்னரே பிரதமர் பதவியை வகிக்கிருர். அவரது சகோதரர் உதவி பிரதமர் பதவியை வகிக்கிருர்.

# தற்கொலை அல்ல; கொலை! மகன் மரணம்; தந்தை கைது

## பூநகரியில் சம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மாஜி உடையாரும் மாஜி திடீர் மரண விசாரணை அதிகாரியுமான ஒருவர் தற்கொலை மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒரு மரணம் பின்னர் கொலையெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பூநகரிப் பகுதியில் உள்ள வன்னேரிக்குளத்தைச் சேர்ந்த வி. அப்பாப்பிள்ளையின் மகன் செல்வராஜாவின் சடலம் அவரது வீட்டிற்குக் கால் மைல் தூரத்திலுள்ள ஒரு மரத்தில் தொங்கிக்கொண்டிருந்தது.

இந்த மரணம்பற்றிய விசாரணை செய்த மாஜி உடையாரும் மாஜி திடீர் மரண விசாரணை அதிகாரியுமான ஒருவர் தற்கொலையெனத் தீர்ப்பளித்திருந்தார். ஆனல் யாழ்ப்பாணப்பதில் மாஜிஸ்திரேட் திரு. வி. வி. சோமசேகரத்தின் உத்தரவின்மீது இதுபற்றி விசாரணை நடத்த உத்தியோகப்பற்றற்ற மாஜிஸ்திரேட் திரு. ஏ. அமிர்தலிங்கம் அங்கு சென்ருர். திரு. ஏ. அமிர்தலிங்கம் அங்கு சென்றபோது தகனக்கிரியைகளுக்கான சடங்குகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. திரு. அமிர்தலிங்கம் கிளிநொச்சியிலுள்ள பகுதி வைத்திய அதிகாரியிடம் சடலத்தை பிரேத பரிசோதனை செய்யுமாறு அறிவித்தார். பகுதி வைத்திய அதிகாரி சடலத்தில் 9 எலும்புகள் முறிந்திருந்தன என்றும் கழுத்தடியில் ஒரு காயம் ஏற்பட்டுள்ளதென்றும் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து திரு. அமிர்தலிங்கம் அது ஒரு கொலை எனத் தீர்ப்பளித்தார்.

உதவி மாஜிஸ்திரேட் திரு. வி. வி. சோமசேகரம் உடனே வன்னேரிக்குளத்துக்கு உதவி சுப்பிரிண்டன் சேனரத்துடனும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் மார்சனுடனும் கிளிநொச்சி பொலிஸ இன்ஸ்பெக்டருடனும் சென்று விசாரணை நடத்தினர்.

இறந்தவரின் தந்தை காவலில் வைக்கப்பட்டுள்ளார். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## 107 பேருடன் சென்ற விமானம் நொறுங்கியது?

வாஷிங்டன், மார்ச் 16

107 பேருடன் சென்ற ஒரு அமெரிக்க விமானத்லதக் காணவில்லை என்றும், வியட்னுமிலிருந்து சென்ற இந்த விமானம் நொறுங்கியிருக்கக் கூடும் என நம்பப்படுவதாயும் அறிவிக்கப்படுகிறது.

## 200 கோடி ரூபாய் யந்திரங்கள்

புதுடில்லி, மார்ச் 16

சென்ற ஆண்டு 200 கோடி ரூபாய் பெறுமதியான தொழில் இயந்திரங்களை இந்தியா உற்பத்தி செய்துள்ளது.

# மாஜி அரசியல்வாதிகள் பற்றி பாக் மந்திரிகள் எச்சரிக்கை

கராச்சி, மார்ச் 16

"பாகிஸ்தானின் புதிய அரசியல் சட்டத்தைத் தகர்த்தே தீருவதென்று புறப்பட்டுள்ளவர்களை"த் தேர்ந்தெடுக்கக் கூடாதென்று, ஆதார ஜனநாயகசபை அங்கத்தினர்களுக்கு மேலும் இரண்டு பாக். மந்திரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இயற்கை வள இலாகா மந்திரி ஏ. பூட்டோ சக்கூரில் பேசுகையிலும், தகவல் இலாகா மந்திரி ஹபிபுர் ரஹ்மன் லாகூரில் பேசுகையிலும் இவ்வாறு எச்சரித்தனர்.

கடந்த காலத்தில் பாக். மக்களுக்கு மோசமான அனுபவம்ஏற்பட்டிருக்கிறதுஎன்றும், நேர்மையான பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்தனுப்பினுலொழிய நாட்டின் கதி அதோகதிதான்என்றும் பூட்டோஎச்சரித்தார். அவர் மாஜி அரசியல்வாதிகளை மனதில் வைத்துக் கொண்டே இவ்வாறு சொன்ஞர் என்பது வெளிப்படை.

ஆதார ஜனநாயக சோதனையை வெற்றிகரமாக நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று மனப்பூர்வமாக விரும்புகிறவர்களை மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஹபிபுர் ரஹ்மான் லாகூரில் பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

பாகிஸ்தானுக்குத் தீமை விளைவிக்கக் கூடிய சிலசக்திகள், நாட்டின் அரசியலில பிரிவினை சக்திகளையும் தீய சக்திகளையும் நுழைக்க விரும்புகின்றனவென்று கூறி, அது குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அவர் எச்சரித்தார்.

ஆட்சியாளர்கள் இம்மாதிரியெல்லாம் எச்சரிக்கைகள் விட்டவண்ணமிருந்த போதிலும் மாஜி அரசியல்வாதிகள், அரசியல் தொண்டர்கள் ஆகியோரிடமிருந்தே ஏராளமான அபேட்சகர்கள் போட்டியிடுவார்கள் என்பது புலனுகின்றது. மாஜி அரசியல்வாதிகள் திட்டமிட்ட ரீதியில் தேர்தல் பிரசாரம் நடத்தி வருவதாக ராவல்பிண்டியிலிருந்தும் கிடைத்து வரும் தகவல்களிலிருந்து தெரிகிறது.

ஆதார ஜனநாயக சபைகள் ஏற்படுத்தப்பட்டபோது இந்த அரசியல்வாதிகள் அவ்வளவாக சிரத்தை காட்டவில்லை. சர்க்காரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் அவற்றுக்கு வழங்கப்படும் என்று அப்போது அவர்கள் எதிர்பார்க்கவில்லை. ராணுவ ஆட்சியினல் விரட்டப்பட்ட அரசியல் தலைவர்களில் அநேகர், அரசியல்சட்ட கமிஷனின் கேள்விகளுக்குப் பதில்அளிக்கையில், ஆதார ஜனநாயக முறையை ஆதரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. என்று விமர்சகர்கள் கருதுகிருர்கள். எனவே இவர்கள் பெருவாரியாக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில், புதிய அரசியலமைப்பில் தீவிர மாறுதல் செய்ய அவர்கள் பாடுபடக்கூடும் என்று கருதப்படுகிறது.

## சிலப்பதிகார விழா

கொழும்பு, வெள்ளி

கொழும்பு தமிழ்ச் சங்கம் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் சிலப்பதிகார விழாவை நடத்தும். முதல் நாள் விழாவுக்கு திரு கே. ஆழ்வாப்பிள்ளையும், இரண்டாம் நாள் விழாவுக்கு சர் கந்தையா வைத்தியநாதனும் தலைமை வகிப்பார்கள்.

புதுவருட விழாவை முன்னிட்டு
மார்ச் 19-ந் திகதி
தொடக்கம்
ஏப்ரல் 14-ந் திகதி
வரை
மலிவு விற்பனை
டயரும்ஸ்
யாழ்ப்பாணம்

# கருவாட்டு இறக்குமதி விபரங்கள்
## பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டன

கொழும்பு, வெள்ளி

1961 ஜூலை தொடக்கம் 1962 பெப்ரவரி வரை இறக்குமதி செய்யப்பட்ட கருவாட்டின் தொகைபற்றிய புள்ளி விபரங்களை வர்த்தக உணவுக் கப்பல் மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தலைகேற்று பார்லிமெண்டில் சமர்ப்பித்தார். ஒவ்வொரு மாதத்திலும் எவ்வளவு கருவாடுஇறக்குமதியாயிற்று என்பதுபற்றிய விபரங்கள் அனைத்தும் அவரது புள்ளி விவரப்பட்டியலில் அறிவிக்கப்பட்டிருந்தது.

கருவாடு இறக்குமதியின் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்ட காலம் தொடக்கமாக மாதாந்தம் இறக்குமதி செய்யப்பட்ட கருவாட்டுவகையின் விபரங்களையும் எந்தநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்பது பற்றியும், ஒவ்வொரு தடவையும் எவ்வளவு கருவாடு கப்பல்களிலிருந்து இறக்கப்பட்டன என்பது பற்றியும் விபரமாகக் கூறும்படி திரு. ஜே. ஆர். ஜயவர்தன வர்த்தக உணவுக் கப்பற் போக்குவரத்து மந்திரியை கேட்டார். அதைத் தொடர்ந்து சகல விபரங்களையும் திரு. இலங்கரத்தின தெரிவித்தார்.

அவர் கொடுத்த விபரயகள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1961 ஜூலை | 2666 | மூடைகள் |
| 1961 ஆகஸ்ட் | 18,777 | ,, |
| 1961 செப். | 20,032 | ,, |
| 1961 அக். | 15,989 | ,, |
| 1961 நவ. | 25,543 | ,, |
| 1961 டிச. | 31,249 | ,, |
| 1962 ஜன. | 6 265 | ,, |
| 1962 பெப். | 19, 987 | ,, |

---

## டாக்கா மாணவர் ஒருநாள் வேலைநிறுத்தம்

டாக்கா, மார்ச் 16

பாகிஸ்தானின் புதிய அரசியல் திட்டத்தை ஆட்சேபித்தும் சிறைவைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்களை விடுதலை செய்யக் கோரியும் ஜனநாயக ஆட்சிமுறையை ஏற்படுத்தவேண்டுமெனக் கோரியும் டாக்கா பல் கலைக்கழகத்தின் வைத்திய என்ஜினியரிங் பிரிவு மாணவர்கள் நேற்று வகுப்புகளுக்குச் செல்லாது ஒருநாள் வேலை நிறுத்தம் செய்தனர். இதில் 300 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## ஆசிரியைக்குப்பிரியா விடை

வவுனியா, வெள்ளி

பூந்தோட்டம் அரசினர் தமிழ்க கலவன் பாடசாலையில் இரண்டு ஆண்டுகளாக உதவி ஆசிரியையாகக் கடமையாற்றிய செல்வி. நா. பரமேஸ்வரி திருநெல்வேலி ஆசிரிய கலாசாலைக்கு இம்மாதம் 15-ந் திகதி பயிற்சிக்குச் செல்வதால் ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் பாடசாலை மண்டபத்தில் பிரியாவிடை வைபவம் கொண்டாடப்பட்டது.

ஆசிரியையின் சேவையைப் பாராட்டி தலைமை ஆசிரியர் திரு. நீ. அந்தோனிப் பிள்ளை, மற்றும் ஆசிரியர்கள் திரு. ம. கந்தசாமி செல்வி. க. இந்திராணி, செல்வி. சு. தவமணி தேவியும் மாணவ மாணவிகள் சார்பில செல்வன் நா. சிவானந்தராசா, செல்வி. கி. ஸ்ரீமதி என்போரும் பேசினர்.

இறுதியில் ஆசிரியை நன்றி கூறினர்.

---

ஆசிரியருக்குக் கடிதம்

## பெற்ரோர் சேவா சங்கம்

கல்வி சம்பந்தமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கும் மாற்றங்கள் அனைத்தையும் கவனிக்கும்பொழுது எமது பிள்ளைகளின் எதிர்காலம் மிகப் பரிதாபமான நிலைக்கு வருவதை மறக்க முடியாது. இந்த ஆபத்தை தடுப்பதற்கு பெற்ரோராகிய நாம் யாவரும் திரண்டு "வடஇலங்கைப் பெற்ரோர் சேவா சங்கம்" என்னும் ஓர் ஸ்தாபனத்தை உருவாக்கி, அதன் மூலம் பரிகாரம் தேடுவதே எமது புனித கடமையாகும்.

ஆதலால் ஒவ்வொரு கிராமப் பகுதிகளிலிருந்தும் இந்த ஸ்தாபனத்திற்கு தொண்டாற்றக்கூடிய நேரமுள்ள பெற்ரோர்களும், மற்ரேரும் தங்களுடைய அபிப்பிராயங்களைக்கீழ்காணும் முகவரிக்கு அறிவிக்கும் படியும் தேவையான விபரங்களைநேரே வந்து அறிந்துகொள்ளும் படியும் தயவாக வேண்டுகிறேன்.

பொ. அப்பையா 2-ம் மாடி இராசா கட்டிடம், யாழ்ப்பாணம்.

## ...பருவக் ... மரணமானர்

யாழ்ப்பாணம், வெள்ளி

புலோலி மேற்கைச் சேர்ந்த முனைஎள் தபாற்கந்தோர் அதிபர் திரு பொன்னையா சுப்பிரமணியத்தின் வயது 40) திடீர் மரணம் பற்றி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினர்.

சம்பவம் நடைபெறுவதற்கு 10 நாட்களுக்கு முன் இறந்த தமது மூக்குள் இருந்த மயிரைப் பிடுங்கிய காரணத்தால் முகம் வீக்கங்கண்டதென்றும், முதலில் டாக்டர் பத்மநாதனிடமும் பின்னர் இ.எம். கணபதிப் பிள்ளை என்ற வைத்தியரிடமும் சிகிச்சை பெற்றுரென்றும் இதன் பின் வலி அதிகமாகவே யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானரென்றும் தெரிவிக்கப்பட்டது.

இயற்கை மரணம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

## வாதரவத்தை ஸ்ரீ கணேச இ. வி. கழகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஸ்ரீ கணேச இளைஞர் வாதரவத்தைவிவசாயக்கழகத்தின் வருடாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர் தேர்தலின் போது தலைவராக திரு. செ. விநாயகமூர்த்தியும், உபதலைவராக திரு. த. தனபாலசிங்கமும், காரியதரிசியாக திரு. சி தங்கரத்தினமும், உப காரியதரிசியாக திரு. செ. இரத்தினரக்சாவும், தனாதிகாரியாக திரு. வ. துரைசிங்கமும், உபதனாதிகாரியாக திரு. மு அப்பாச்சாமியும், பத்திராதிபராக திரு. ஐ சின்னராசாவும், உப பத்திராதிபராக திரு. இ. தெய்வேந்திரமும், ஆலோசகராக திரு. செ. சின்னராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## நடிகருக்கு 'கலைக்குரிசில்' பட்டம்

உடுப்பிட்டி வெளிள்

கலையரசு சொர்ணலிங்கம் காலத்திலிருந்தே, அவரது நாடகங்களில் பல வேடங்கள் தாங்கி நடித்து வந்த நெல்லியடி வாசி திரு. எஸ். கந்தவனத்துக்கு அடுத்த மாதம் கரவெட்டி வாணி கலைக்கழக ஆதரவில் நடக்கும் முத்தமிழ் விழாவில் "கலைக்குரிசில்" என்னும் பட்டம் வழங்கப்படும்.

திரு. கந்தவனம் வாத்திய இசைகளில் மட்டுமின்றி, சமூக சேவைகளிலும் பெரிதும் ஈடுபாடுடையவர்.

---

## எவருக்கும் வெற்றியில்லை

தெல்லிப்பழை, வெள்ளி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் கொழும்பு இந்துக்கல்லூரிக்கும் ஹாட்லிக் கல்லூரிக்கு மிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது.

அதே மைதானத்தில் ஹாட்லிக் கல்லூரியும் சென் ஜோன்ஸ் கல்லூரியும் கலந்து கொண்ட கிரிக்கட் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி 55 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

---

## நெல்லண்டை கழகம் வெற்றி

பருத்தித்துறை, வெள்ளி

புத்தாண்டுவிழாவையொட்டி பருத்தித்துறைப் பொலிசாரால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றுவரும் கைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நெல்லண்டை விளையாட்டுக் கழகக் கோஷ்டியினர் தம்முடன்கலந்துகொண்டமனோகரா, சிவானந்தாஆகிய இருகோஷ்டிகளையும் தோற்கடித்தனர்.

இப்போட்டி ஆட்டங்கட்குத் திருவாளர்கள் பொ. வீரவாகு, க. நாராயணபிள்ளை ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினா.

# இலங்கையின் பொருளாதார நிலைமைகள்
## பிரிட்டன் ஆராய்கிறது

கொழும்பு, வெள்ளி

இலங்கையின் பொருளாதார நிலைமைகள் பற்றி பிரிட்டனின் வர்த்தகசபை ஒரு ஆராய்ச்சி நடத்திவருகிறது. குறிப்பாக இலங்கைக்கு பிரிட்டன் அனுப்பிவைக்கும் பொருள்கள் பற்றிய அம்சங்களை பிரிட்டன் வர்த்தகசபை ஆராய்கிறது.

பிரிட்டிஷ் வர்த்தகசபையின் ஏற்றுமதிப்பகுதியே இந்த ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது. இலங்கையின் உள்ளூர்ப் பொருளாதார நிலைகள்பற்றி நேரடியான தகவல்களை அறிந்துகொள்ளுமுகமாகவே இந்த ஆராய்ச்சி நடாத்தப்படுகிறது.

பிரிட்டிஷ் வர்த்தக சபையைச் சேர்ந்த இரண்டு நிபுணர்கள் இலங்கை நிலைமைகளை நேரடியாகப் பார்வையிடுவதற்கெனச் சமீபத்தில் இங்கு விஜயம்செய்திருந்தார்கள். வர்த்தக அமைச்சு அதிகாரிகள் சிலரை பிரிட்டிஷ் நிபுணர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பிரிட்டின் பொருள்கள் இறக்குமதியாளர் பலரையும் இவர்கள் சந்தித்தனர்.

# இந்திய திரைப்பட இறக்குமதிக்கு 2 ஆண்டுகளில் ரூ. 60 லட்சம்

கொழும்பு, வெள்ளி

திரைப்பட இறக்குமதிக்கென 1960-ம், 1961-ம் ஆண்டுகளில் இலங்கை சுமார் 60 லட்சம் ரூபாயை இந்தியாவுக்கு அனுப்பியுள்ளது.

இந்திய திரைப்படங்களை வேறெந்தநாட்டிலும் பார்க்க இலங்கையே அதிகமாக இறக்குமதிசெய்கிறது எனச் சமீபத்தில் நடந்த ஆராய்ச்சியொன்றினால் தெரியவந்துள்ளது. சிங்கப்பூர், ஏடன், ஆப்கானிஸ்தான், தாய்லாந்து, கானு, இந்தோனேஷியா ஆகிய நாடுகள் இந்திய திரைபபட இறக்குமதி செய்யும் ஏனைய நாடுகளாகும்.

இந்திய திரைப்பட ஏற்றுமதி படிப்படியே அதிகரித்து வருகிறது. 1958-ல் திரைப்பட ஏற்றுமதியால் இந்தியாவுக்கு ஒரு கோடி ரூபாய் வருமானம் கிடைத்தது. 1960-ல் அது ஒருகோடியே எழுபத்தாறு லட்சமாக அதிகரித்தது. 1961-ல் முதல் 10 மாதங்களிலேயே திரைப்பட ஏற்றுமதியால் இந்தியாவுக்கு ஒருகோடியே நாற்பத்தைந்து லட்சம் ரூபாய் வருமானம் கிடைத்தது.

---

## அருந்ததியர் சங்க 30-வது ஆண்டுவிழா
### இன்று ஆரம்பம்

கொழும்பு, வெள்ளி

அகில இலங்கை அருந்ததியர் சங்கத்தின் 30-வது ஆண்டுவிழா இம்மாதம் 17-ம் திகதி கொழும்பு ஸ்ரீநாராயண குரு மண்டபத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் திரு. எஸ். தொண்டமான் எம். பி. உட்பட பலர் சொற்பொழி வாற்றுகின்றனர்.

## வாதநோய்க்கு ரஷ்யாவிலிருந்து மருந்து

கொழும்பு, வெள்ளி

இவ்வாண்டில 85 பேர் இளம்பிள்ளை நோய்க்குள்ளாகியிருக்கின்றனர். இதில் 60 பேர் 'லேடி ரிட்ஜ்வே' ஆஸ்பத்திரியில் இருந்துவருகிறார்கள் எனவும் 5 பேர் கொழும்பு அரசாங்க ஆஸ்பத்திரியில் இருந்து வருகிறார்கள் எனவும் சுகாதார இலாகா வட்டாரங்கள் கூறியுள்ளன.

இளம்பிள்ளை வாதநோய் தடுப்புக்கு உபயோகிக்கப்படும் தடுப்புப் பால் மருந்து 'லேடி ரிட்ஜ்வே' ஆஸ்பத்திரியில் தீர்ந்துபோய்விட்டது. இங்கிலாந்து, கனடா, ரஷ்யா ஆகிய நாடுகளிடம் இந்தத் தடுப்பு மருந்தை அனுப்பி வைக்கும்படி இலங்கை கோரியுள்ளது. அடுத்த வாரமளவும் புதிய மருந்து 'ஸ்டாக்குகள்' வந்திறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்யா, தடுப்பு மருந்தை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கவிருப்பதாகத் தெரிகிறது. இங்கிலாந்து அவ்வாறு நன்கொடையாக வழங்கமாட்டாது.

தடுப்புப்பால் இறக்குமதியாகியதும்நோய்கண்டபகுதிகளில் பால் கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. கொழும்பு நகரப்பகுதியில் பால்கட்டும் வேலைகளை நகரசபை மேற்கொள்ளும்.


டயரும்ஸ்

புதுவருட விழாவை முன்னிட்டு

மலிவு விற்பனை

மார்ச் 19-ந் திகதி தொடக்கம்

ஏப்ரல் 14-ந் திகதி வரை

புது வருட விழாவிற்கு பிரத்தியேக விற்பனை செய்கிறோம்.

சகல பகுதிகளிலும் உள்ள புடவைகளை மேலும் மலிவான விலையில் விற்பனை நடாத்துவோம்.

உங்கள் விருப்பத்திற்கேற்ற தெரிவுகளை தெரிந்தெடுங்கள்!

டயரும்ஸ்

54-60, மெயின் விதி, யாழ்ப்பாணம்.



மிகத் திறமையான

பவர்ஸ்

உரங்கள்

கிருமி நாஸ்தினி தெளிக்கும் யந்திரங்களும்

லாபகரமாய் பயிரிட

- புகையிலை
- வெண்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- வாழை

மற்றும் பழவகைகளும்

கிடைக்குமிடம்

ஏ. பவர்

அன் கொம்பனி லிமிட்டெட்,

த. பெ. 11. கொழும்பு.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

சனி 17-3-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வி. இரத்தினம் - பாட்டு.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியக் கோஷ்டி, 9-30 விஜயலட்சுமி இராஜேந்திரம் - பாட்டு.

ஞாயிறு 18-3-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரைஇசை, 8-00 குரல்வகை, 8-15 தமிழ்மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி. 9-00 முஸ்லிம்சமயப் பாடசாலை, 9-30 கதம்பஇசை, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்பகுதி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலையஒலிப் பதிவுகள், 5-45 திரைக்குரல், 6-15 குரல்வகை, 6-30 தாள வாத்தியக் கச்சேரி.

இரவு 7-00 மாதர்கேட்டவை, 7-30 லலிதா, சாரதா - பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 'அணைந்ததீபம்' - நாடகம், 9-45 தேர்ந்தஇசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

சனி 17-3-62

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 எஸ். சிவஸ்வாமி - வயலின்.

பகல் 12-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல்இசை, 2-10 என். சிவஸ்வாமி - வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'வேங்கைத் திரையன்' - மேடைநாடகம், 9-15 பேச்சு (சென்னை அஞ்சல்), 9-30 அகிலபாரத சங்கீதநிகழ்ச்சி.

ஞாயிறு 18-3-62

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-30 எஸ். நாகம்மா - பாட்டு, 8-15 எம். பி. என். சேதுராமன், எம். பி. என். பொன்னுச்சாமி - நாகஸ்வரம்.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி - கதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்தியஇசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 சேலம் ஜி. தேசிகன் - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 பி. மலையப்ப சாஸ்திரி - பாட்டு, 8-30 எஸ். நாகம்மா - பாட்டு, 9-15 வாத்தியஇசை, 9-45 ஆகாசவாணி ஒலிபதிவுகள்.

---

## தற்கொலை, பயிர்விளைச்சல் இல்லையாம்!

பருத்தித்துறை, வியாழன் புலோலி மேற்கைச் சேர்ந்த 65 வயதுள்ள கந்தப்பர் கணபதிப்பிள்ளை என்பவர் அவரது பயிர் விளைச்சலில்லாத காரணத்தால் நஞ்சுத் திராவகம் உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டார். தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

## ஆயுர்வேதவைத்திய வளர்ச்சிக்கு அரசாங்கம் உதவிசெய்யும்

### சுகாதார மந்திரி அறிவிப்பு

கொழும்பு, வியாழன்

"முன்னைய அரசாங்கங்கள் ஏழைகளின் பிரச்சினைகளை தீர்க்கவில்லை. அப்பிரச்சினைகளைத் தீர்ப்பது இன்றைய அரசாங்கத்துக்குப் பெரும் பொறுப்பாக இருக்கிறது. கிராமங்களுக்கு ஆயுர்வேத வைத்தியம் பெரிதும் உதவியாகவிருந்து வந்தது. அதன் வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகளை அரசாங்கங்கள் செய்யவில்லை. ஏழைகளுக்கு உதவும் ஆயுர்வேத வைத்தியத்துக்கு அரசாங்கம் உதவி செய்யும்"

இவ்வாறு சுகாதார அமைச்சர் திரு. ஏ. பி. ஜயசூரியா வலர்முல்லா ஆஸ்பத்திரியில் அமைக்கப்பட்ட புதிய பிரசவ விடுதியொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

ஆஸ்பத்திரி நலன் பாதுகாப்பு சங்கத்தினர், திறப்பு விழா வைபவத்துக்கான ஒழுங்குகளைச் செய்திருந்தனர்.

திரு. ஜயசூரியா தொடர்ந்து பேசுகையில் டந்த சில காலமாக ஆயுர்வேத வைத்தியத்துக்குக் கிடைத்த ஆதரவுக்குக் காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவே காரணம் என்றும் திரு. பண்டாரநாயக்காவின் கொள்கையைத் தொடர்ந்தும் கடைப்

## வேலணை சனசமூக நிலையம்

ஊர்காவற்றுறை, வியாழன் வேலணை தெற்கு 'ஐயனார்' சனசமூக நிலையம் கடந்த பல மாதங்களாக பூட்டப்பட்டு இயங்காமல், இருப்பதையிட்டு இளைஞர் வட்டாரத்தில் அதிருப்தி கூறப்பட்டுவருகிறது.

நிலையம் சில காலம் பூட்டப்பட்டு இருப்பதால், இளைஞர் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

---

பிடிக்கவேண்டியபொறுப்பு திருமதி ஸ்ரீமவோ பண்டாரநாயக்காவைச் சேர்ந்துள்ளதென்றும் கூறினார்

ஆயுர்வேத வைத்தியத்துக்குச் செலவு சகல வசதிகளுடனும் நிறுவப்படும் ஆய்வுகூடங்களை இந்தியப் பிரதமரைக் கொண்டு திறந்துவைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

## புலோலி பாடசாலை மாணவிகள் ஸ்கொலர்ஷிப் பெற்றனர்

பருத்தித்துறை, வெள்ளி புலோலி மெதடிஸ்த் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவிகளான வே. பதமலோசனி, க. தனேவதியாகிய இருவரும் அரசினர் மத்திய மகா வித்தியாலயங்களில் கல்வி கற்பதற்கான உபகாரப் பணமளித்தற்கான தேர்வுப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் முறையே நெல்லியடி, வசாவிளான் ஆகிய மத்திய மகா வித்தியாலயங்களில் அங்கீகரிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.




# அடுத்த மாதம் முதல் லங்கா எண்ணெய் விற்பனை

கொழும்பு, வெள்ளி

"லங்கா எண்ணை, லங்கா பெட்ரோல் ஆகியவை இலங்கைப் பெட்ரோலியம் கார்ப்பரேஷனால் ஏப்ரல் மாதம்முதல் விநியோகிக்கப்படும்" என்று கடந்த புதன்கிழமை மாலை கொலன்னாவையிலுள்ள பெட்ரோலியம் கார்ப்பரேஷனின் 300 லட்சம் கலன் கொள்ளக் கூடிய எண்ணெய்த் தாங்கியின் எண்ணெய் நிரப்பும் கருவியை திறந்து வைத்துப் பேசுகையில் வர்த்தக, உணவு, கப்பல் மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின கூறினார்.

இந்த வைபவத்துக்கு மந்திரிகள், பார்லிமெண்ட் அங்கத்தினர்கள். செனட்டர்கள், அரசாங்க இலாகாத் தலைவர்கள் சோவியத் தூதர் திரு. என். டறகனோவ் ஆகியோருடன் ஏராளமானோர் சமூகமளித்திருந்தனர்.

மந்திரி மேலும் கூறியதாவது: "அரசாங்கத்துக்கும்மக்களுக்குமிடையே பெரிய வித்தியாசம் எதுவுமில்லை. உலகின் பல நாடுகளிலும் தேசிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அங்குள்ள மக்கள் பெரும்முயற்சி எடுக்கின்றார்கள். யாரையும் தாக்குவது எங்களது நோக்கமல்ல. ஆனால் எங்களை எவரும் தாக்கினால் திருப்பித் தாக்க நாங்கள் பின்நிற்கமாட்டோம். இருந்தபோதிலும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நிகழக்கூடாது என்பதே எங்களது பிரார்த்தனையாகும்.

இந்தக் கார்ப்பரேஷன் ஏராளமான அளவில் எண்ணெயை இங்கு இறக்குமதி செய்யும். அதற்குப் பதில் எங்களது தேயிலை, ரப்பர், தேங்காய் மற்றும் விவசாயப் பொருட்கள் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும். இன்று லங்கா எண்ணெயின் முதற் பகுதி எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இந்த எண்ணெய் ரஷ்யாவிலிருந்து இங்கு வந்திருக்கிறது. கூடிய விரைவில் வேறுபல நாடுகளிலிருந்தும் எண்ணெய் இங்குவரும். தாங்கிகள் நிறைந்ததும் லங்கா எண்ணெ விநியோகிக்கப்படும். சிங்கள புதுவருட தினத்தன்று தாங்கிகள் நிறைந்துவிடும் என நம்புகின்றோம். எண்ணெய் விநியோக விழாவை பிரதமர் ஆரம்பித்து வைப்பார்.

# மகனும் தந்தையும் ஒரே நாளில் தற்கொலை !

## அல்லைப்பிட்டியில் பரிதாப சம்பவம்

அல்லைப்பிட்டி, வெள்ளி

தேவராசா (வயது 19) என்ற இளைஞர் நச்சுத்திராவம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். மகனின் பிரிவைத்தாங்க முடியாத நிலையில் அவருடைய தந்தை செல்லத்துரை (வயது 55) அதே நஞ்சுத்திரவகம் அருந்தி மரணமானார். இப்பரிதாப சம்பவம் அல்லைப்பிட்டியில் நடந்தது.

திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. சி இரத்தினசபாபதி மரணவிசாரணை நடத்தினார். இறந்த தேவராசாவின் சகோதரியும், செல்லத்துரையின் மூத்தமகளுமான தங்கம்மா சாட்சியமளிக்கையில் கூறியதாவது. நடந்த தினத்தன்று பிற்பகல் 3 மணிபோல் எனது சகோதரன் தேவராசா என்னுடைய வீட்டிற்கு வந்தார் தான் நச்சுத்திரவகம் குடிக்கப் போவதாக என்னிடம் கூறிக்கொண்டு திரும்பி தனது வீட்டைநோக்கி ஓடினார், நானும் அழுதுகொண்டு பின்தொடர்ந்தேன் அன்நேரம் அவரின் கையில் வெள்ளிநிறத்தில் ஒருபோத்தல் இருக்கக் கண்டேன் ஆனால் அவரோடு என்னால் ஓடமுடியவில்லை. நான் அழுத சத்தத்தில் காலஞ்சென்ற எனது தந்தையார் வீட்டிற்குள் இருந்து வெளியே வந்தார். அவரைக் கண்டதும் தேவராசா போத்தலில் உள்ள நச்சுத்திராவகத்தை அருந்தினார். நாங்கள் தடுக்க முயன்றும் முடியவில்லை அதே நேரத்தில் அவர் கையில் இருந்த நஞ்சுத்திராவக போத்தலை பிடிங்கிக்கொண்டு எனது தந்தையார் சிறிது தூரம்ஓடினார். பின்பு அவரும் குடித்துவிட்டதாகக் கூறிக்கொண்டு வெற்றுப்புட்டியை எறிந்தார். அதை எனது மூத்தசகோதரன் கார்த்திகேசு எடுத்தும் அங்கு வந்த கணவதிப்பிள்ளை அதைப் பறித்துக்கொண்டார். நஞ்சு அருந்தி பத்து நிமிடங்களில் இருவரும் மரணமானார்கள்.

மரணவிசாரணை அதிகாரி குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:- "எனது சகோதரனுக்கும் தந்தைக்கும் இடையில் நீண்ட நாட்களாக மனக்கசப்பு இருந்துவந்தது "தான் இந்த உலகத்தில் வாழ விரும்பவில்லை" என்று அவர் என்னிடம் அடிக்கடி கூறிவந்தார். இதன் காரணமாகவே அவர் நஞ்சு அருந்தினார். அவரின் பிரிவைத் தாங்கமுடியாத தந்தையாரும் அதேவிஷம் உண்டு இறந்தார்.

காலஞ்சென்ற செல்லத்துரையின் மகனும், தேவராசாவின் சகோதரருமான காத்திகேசுவின் சாட்சியமும், கணவதிப்பிள்ளையின் சாட்சியமும் பதிவாகிய பின் "ஒரே வீட்டில் இரண்டுபேர் தற்கொலை செய்துகொண்டது இத்துடன் இக்கிராமத்தில் இரண்டாவது தடைவையாகும் ஒருவர் இறந்து விட்டார் என்ற மனத்தாங்கலில் மற்றவர்களும் தற்கொலை செய்ய இடமளிப்பது குடும்பக்காரர்களின் கவனக்குறைவு என்றே நான் கருதுகின்றேன். இனிமேலாகிலும் இப்படியான நிலைமை ஏற்படாமல் முன் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது ஒவ்வொரு மக்களின் முக்கிய கடமையாகும்" என திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. சி. இரத்தினசபாபதி கூறி பிரஸ்தாப நபர்கள் நஞ்சுண்டு தற்கொலை செய்துகொண்டனர் எனத் தீர்பளித்தார்.


புதுவருட விழா

மலிவு விற்பனை

மார்ச் 19 — ஏப்ரல் 14

டயரும்ஸ்

யாழ்ப்பாணம்


# மகாத்மா பற்றி படம் பிடிக்க அனுமதித்ததற்கு ஆட்சேபம்

## விவாதத்தை அனுமதிக்க சபாநாயகர் ஆதரவு; பிரதமர் எதிர்ப்பு

புதுடில்லி, மார்ச் 16

மகாத்மா காந்தி கொலையுண்ட சம்பவம் சம்பந்தமாக சினிமாப் படம் பிடிக்க லண்டன் படத் தயாரிப்பு ஸ்தாபனம் ஒன்றுக்கு இந்திய அரசாங்கம் அனுமதியளித்தது குறித்து லோகசபையில் கோபாவேசமான கேள்விகள் கேட்கப்பட்டன.

மகாத்மா காந்தியின் வாழ்க்கை எந்த வகையிலும் திரித்துச் சித்திரிக்கப்படக்கூடாது என்பதில் அங்கத்தினர்களுக்குள்ள உணர்ச்சி தமக்கும் பூரணமாக உண்டென்று பிரதமர் நேரு கூறினார். ஆனால், பிரஸ்தாப படம் இன்னும் தயாராக வில்லையென்பதைச் சுட்டிக்காட்டி, எனவே அது மகாத்மா காந்தியின் வாழ்க்கையைத் திரித்து சித்திரிக்கிறதா இல்லையா என்பதை இப்போதே கூறுவதற்கில்லை என்றும் அவர் சொன்னார்.

காந்திஜியின் வாழ்க்கையைப் படமாக்குவதற்கு இந்தியத் தயாரிப்பாளர்களுக்கு அனுமதியளிக்காமல், அந்நியத தயாரிப்பாளருக்கு அனுமதி கொடுத்தது ஏன் என்று பேராசிரியர் ஹிரேன் முகர்ஜி, ஸ்ரீ மகவீர தியாகி உட்பட பல அங்கத்தினர்கள் தகவல் இலாகா மந்திரியைக் கேட்டபோது குறுக்கிட்ட நேரு, இவ்வாறு கூறினார்.

மகாத்மாவைக் கொலை செய்த பாத்திரம், இந்தப் படத்தில் அனுதாபத்துடன் கூடிய தோரணையில் சித்திரிக்கப்பட்டிருப்பதாக பேராசிரியர் முகர்ஜி கூறினார்.

மகாத்மா காந்தியை தமாஷா விஷயமாக ஆக்கக்கூடாது என்று ஸ்ரீ தியாகி சொன்னார்.

இது சம்பந்தமாக அரைமணி நேர விவாதத்தை அனுமதிப்பது என்று சபாநாயகர் செய்த முடிவையும் மேலே குறிப்பிட்ட காரணத்துக்காக, பிரதமர் எதிர்த்தார்.

படம் இன்னும் தயாராகவில்லையென்றும், எனவே இந்தப் படம் திரித்துச் சித்திரிக்கும் முயற்சியா இல்லையாஎன்பதை விவாதிக்கவோ முடிவு செய்யவோ அடிப்படை எதுவும் இல்லையென்றும் அவர் சொன்னார். படத் தயாரிப்புக் குறிப்பைத் தாம் பார்க்கவில்லையென்றும், தகவல் இலாகா மந்திரியும் அதை நேரடியாகப் படித்துப் பார்க்கவில்லையென்றும் நேரு தெரிவித்தார்.

பல அங்கத்தினர்கள் சிரத்தைகாட்டுவதால் விவாதம் நடத்தலாமென்று சபாநாயகர் யோசனை கூறினார்.

## வசந்தோற்சவம்

புங்குடுதீவு, வெள்ளி

புங்குடுதீவு கிழக்கு கலட்டி. ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய 6-ந் திருவிழா வசந்தோற்சவத்தை முன்னிட்டு வருகிற (17-3-62) சனிக்கிழமை பகல் ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் அலங்கார உற்சவமும் நடைபெறும்

இரவு சங்கீத கதாப்பிரசங்கமும், மேளக் கச்சேரியுடனும் காவடியாட்டம், கரகம், பந்தவிளையாட்டு இன்னும் பல வேடிக்கைகளுடனும் அழகான அன்னப்பட்சி தண்டிகையில் விநாயகப் பெருமான் ஆரோகணித்து வீதிவலம் வருதலும் நடைபெறும்.

கண்டி

## நூதனசாலையில் பேய் நடமாட்டம்?

கண்டி, வெள்ளி

இரவு வேளையில் பிசாசு வந்து தங்களைப் பயமுறுத்துகிறதென்று கண்டி தேசிய நூதன பொருட்காட்சிச்சாலையின் இரவுக் காவற்காரர்கள் முறையிட்டுள்ளனர்.

பண்டா என்பவர் ஒருநாள் இரவு மயக்க நிலையில் அவர் வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டாரென்றும், சம்பவம் நடைபெற்ற தினத்தன்று இரவு நூதனசாலையின் ஒரு இடத்திலிருந்து மனித எலும்புக்கூடு ஒன்று பண்டாவை நோக்கி நடந்துவந்ததென்றும் அதனால் அவர் பயப்பட்டாரென்றும் கூறப்படுகிறது.

குறிக்கப்பட்ட இடத்திலுள்ள காரியாலயமொன்றில் மனித எலும்புக்கூடு ஒன்று வைக்கப்பட்டிருக்கிறதென்றும், இதை நூதனசாலையின் விலங்குக் காட்சிச்சாலையில் வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறதென்றும் தெரிகிறது.

முன்னர், போகம்பரா பகுதியில் இரவு வேளையின்போது ஒரு பெண் பிசாசு கூச்சலிடுவது வழக்கமென்றும் அறிவிக்கப்பட்டது.

## பர்மாவில் குதிரைப்பந்தயம் தடை

ரங்கூன், மார்ச் 16

குதிரைப் பந்தயத்தையும், அழகுராணிப் போட்டிகளையும் பர்மாவின் புரட்சி சபை தடைசெய்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது


மெஷீன் மைண்டர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் நன்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஒரு கம்பனிக்கு அனுபவம் வாய்ந்த சிலிண்டர்-பிளாட்டின் மெசின் மைண்டர்கள் தேவை. அச்சு இயந்திரம் பழுதுபார்க்கும் அறிவு விசேஷ தகைமையாகக் கணிக்கப்பெறும். விபரங்கட்கு: X25, C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம்.

காணி விற்பனைக்கு

உரும்பராய் கிழக்கிலும் (மணியம் புலம்) பலாலிரோட் அருகாமையிலும் 12 பரப்பு கொண்ட இருகாணிகளும் இராச வீதி, கோப்பாயில் ஒன்றும் உண்டு. சிவசம்பு துரைராசா, உரும்பராய் கிழக்கு அல்லதுகச்சேரி யாழ்ப்பாணம்.

மலிவு விற்பனை

மார்ச் 19 — ஏப்ரல் 14

டயரும்ஸ்

யாழ்ப்பாணம்

விரைவில் எதிர்பாருங்கள் !

சினிமாஸ் திரைகளில்

எம். ஆர். ராதா, மகாலிங்கம், ஈ. வி. சரோஜா

நடித்த

ஆட வந்த தெய்வம்

சினிமாஸ் திரைகளில் விரைவில் வருகிறது!

சித்திரா அசாத்

நடித்த

ஜிம்போ

(முழு நீளக் கேவா கலர் வனந்தரக் காட்சிகள் நிறைந்த படம்)

கடைசி வாரம்!

பிளாஸா (வெள்ளவத்தை) கெப்பிட்டல் (கொழும்பு)

மனோகர், வீரப்பா, ஈ. வி. சரோஜா, ராஜசுலோசனா

நடித்த

கைதி கண்ணாயிரம்

10வது வெற்றி வாரம்!



கிங்ஸ்லி (கொழும்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி நடித்த

பாச மலர்

மனோகரா (யாழ்ப்பாணம்)

மாலை 6-30 இரவு 9-30 க்கு

வைஜயந்திமாலா நடித்த

மதுமதி

சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும் கிழமை நாட்களில் மாலை 4-15 க்கும

Oscar Wilde

(ஆங்கிலம்) வயதுவந்தவர்களுக்கு மட்டும்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 60-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.